திராவிடநாடு

13—10—57 | வார வெளியீடு | விலை 16 காசு

ஒருநாளும் மறவாதே!

—[ரவி]—

ஒருநாளும் மறவாதே!—உனதரும்
திருவாழ்வு தமிழாகும் அறிவாய் (ஒருநாளும்)

கருவில் உயிர்த்தது தமிழின் குருதி
உருவில் உதித்ததும் 'அம்மா'வென் றுருதி
மருவிக் குடித்த மாத்தமிழ் அமிழ்தை
மறக்கச் சொல்பவரைத் 'தூ'வென் றிகழ்ந்தே (ஒருநாளும்)

பருவம் பெற்றதும் பழஞ்சுவை நூலால்
உருவம் கொண்டிடும் உள்ளமும் மேலாய்!
திருநிகர் மனையாள் சுவையினை மொண்டு
தீஞ்சுவை தமிழால் நிறைத்தகற் கண்டை (ஒருநாளும்)

குறளும் பெற்றேம்; அகம்புறம் கற்றேம்;
கூடிடும் கொடுஉளம் வீழ்நிலை யற்றேம்;
அறமும் கொண்டோம்; தமிழ்ச்சுவை உண்டோம்;
அருந்தமிழ் அழிப்போர் தலையினித் துண்டாம் (ஒருநாளும்)

விடுதலை பெறவே பல்லுயிர் ஈந்தோம்
வண்டமிழ் அழிவையே விடுதலை சேர்த்தால்
கொடுவாள் எடுத்தே குவலயம் அழித்தே
குரங்கு இந்தியின் கொடுமையை அழிக்க (ஒருநாளும்)

ஒரு கதை

பயம்

—பட்டுநி—

திரும்பிப் பார்த்தேன்! ஆயிரம் தேள்கள் ஒரே சமயத்தில் கொட்டியது போலிருந்தது எனக்கு!! வழி மறைத்துக்கொண்டு நின்றிருந்தவர், எனக்குப்பெரிய அதிகாரி. என்னை உயர்ந்தவனுக்கும் சக்தியும், உயராமல் தாழ்த்தச்செய்திடும் வல்லமையும் அவரிடம்தான் இருக்கிறது. அவரையன்றோ நான், "என்ன சார்! இறங்கிறவனுக்கு வழிவிடுவோமே எனகிற மூளைகூட இல்லாமல், இப்படி மறைத்துக்கொண்டு நிற்கிறீர்களே", என்று கேட்டுவிட்டேன்.

அலுவலகத்தை விட்டு பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருந்தேன் நான். அந்த இடத்தில்தான், என் வீட்டுக்குப்போக இறங்க வேண்டும். அந்த அவசரம் எனக்கு. ஆனால், நின்றுகொண்டிருப்பவர் 'இவர்'தானென்று தெரிந்தால் இப்படிச் சொல்லியிருக்கவே மாட்டேன். அது மட்டுமல்ல, நான் உட்கார்ந்திருந்த இடத்தையும அவருக்கு 'தானம்' செய்திருப்பேன். ஆனால், அடித்துப் பிடித்துக்கொண்டு, ஒவ்வொரு இடத்திலும் ஏறிய பலருள் அவரும் ஒருவர்போலும்! என் கண்ணில், பஸ்ஸிலிருக்கும் வரையில் தென்படவில்லை — இறங்கும்போதுதான் இந்த விபரீதம்!!

என் முகமாற்றத்தையும் குழப்பத்தையும் கண்ட அவர், "பரவாயில்லை!" என்று சாதாரணமாகத்தான் சொன்னார். என் மனம் சமாதானம் அடையவில்லை. இதுவரையில் அலுவலகத்தில் நான் கட்டிவந்த நல்ல பெயர் எனும் கோபுரம், அந்த நிமிடமே தரைமட்டமாகி விட்டதோ என்கிற குழப்பம் வீட்டுக்கு வந்தும் விடவில்லை. குரலில் கோபம் இருந்ததோ-பரவாயில்லை என்று சொல்லியபோது அவர் முகம் எப்படியிருந்தது — என்று ஆராய்ச்சி செய்யும் 'கொலம்பஸ்' ஆகிக்கொண்டிருந்தேன். ஆனால், எனக்கு 'அமெரிக்கா' தெரியவில்லை. இச்சமயத்தில் வழக்கம் போல் தினசரி உரையாட வரும் என் நண்பன் வந்தான். யாரிடமாவது இச்சம்பவத்தைச்சொல்லி விளக்கம் பெறத் துடித்தேன். விபரம் கேட்ட என் நண்பனே,

"நீ இப்படித்தானப்பா! கடுகையும் மலைபோல எண்ணிக்கொண்டு மனம் கலங்குவாய். உன்வரையில் நீ தவறு செய்யவில்லையென்று மனதார உணருகிறாயல்லவா? பிறகு ஏன் குழம்புகிறாய்!" என்றான். பதில் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. அவனுக்கென்ன —அவன் அப்பா சம்பாதித்து வைத்த சொத்து இருக்கிறது— எனனைப்போல் 'பிரமோஷனையும்' 'சம்பள உயர்வையும்' எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இல்லை. இரண்டும் எனக்கு கிடைக்காவிடில் ஆண்டுக்கு ஒன்

வண்டு

றாக 'மனித வளர்ச்சி'யைக் கண்டு கொண்டிருக்கும் என் குடும்பத்தின் கதி என்ன ஆவது!!

என் மனநிலையைத் தெரிந்துகொண்டான், மாணிக்கம்—என நண்பன் பெயர் அதுதான. "ஒரு கதை சொல்கிறேன். கேட்கிறாயா?", என்றான். கதை-என்றதும் நிமிர்ந்து உட்கார்ந்தேன். அவன் ஆரம்பித்தான்.

* * *

அழகான நாட்டியம் நடந்துகொண்டிருந்தது. ஆட்டமும் பாட்டும் சபையினரை ஆனந்
தக் கடலி[ல்]
ஆழ்த்தி[க்]
கொண்டிரு[ந்]
தது. மேடைக்[கு]
அருகில் இரண்
டாவது வரிசை
யில்உட்கார்ந்[து]
கொண்டிரு[ந்]
தான் அவன்[.]
இந்த இன்ப
மான நேரத்தில்
... எல்லோரும்
அமைதியா[க]
யிருந்த சமயத்
தில்...அவனால்
தாங்கமுடிய
வில்லை; கை[க்]
குட்டையை எடுத்து வாயில்
பொத்திக்கொண்டான். கண்கள்
பிதுங்கினவே ஒழிய, அவனால்
அதை அடக்க முடியவில்லை
அவன் சக்திக்குட்பட்ட 'அடக்கு
முறை பாணங்கள்' எத்
தனையுண்டோ அத்தனையையும்
பிரயோகித்துப்பார்த்தான்
அடக்குமுறைகளை வீசவீச
கொதித்து எழும் மக்கள் புரட்சி
யாகிக்கொண்டிருந்தது அது
வேறொன்றுமல்ல— தும்மல்தான்
அதற்கு இடமும நேரமுமா தெரி
கிறது? இயற்கை நிகழ்ச்சி! ஏர்
பிடிப்பவனிலிருந்து பார் ஆளு
பவன் வரையில், இடம் பேதம்
பார்க்காமல், அது வரத்தான்
செய்கிறது. அதற்கு யார் என்ன
செய்யமுடியும? ஆனால் அவன்
அப்படி நினைக்கவில்லை. பக்கத்தி
லிருப்பவர்கள் எனன சொல்வார்
களோ, கொட்டகையில் நாட்டியம்
ரசிபபவர்கள் ஏதாவது கடும்
சொல் வீசுவார்களோ, என்று
அஞ்சினான்—அமுக்கினான். கேட்க
வில்லை, தும்மல்! கடைசியில் தும்
மியேவிட்டான்!! தும்மும்போது
எச்சில் யார்மீதாவது தெரித்
ததோ என்று அங்குமிங்கும்
பார்த்தான். முதல் வரிசையி
லிருந்த ஒரு உருவம் அவனைத்
திரும்பிப் பார்த்ததுபோலிருந்
தது. "அது யார்?" என்று நோக்
கினான். அந்த உருவம், தனகைக்
குடடையை எடுத்து, முகத்தைத்
துடைத்துக்கொளவது தெரிந்
தது. "சரி! சரி!! நம எச்சில் அவர்
மேல் பட்டுவிட்டதுபோலிருக்
கிறது..." என்று பயந்தபடியே
எட்டிப்பார்த்தான். அவர்
ஒன்றும் சொல்லவில்லை

(4-ம் பக்கம் பார்க்க)

பால சந்திரன்!

16] ஆண்டு சந்தா ரூ. 8 [13—10—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 13

புதியதோர் சந்திரனை, ரஷ்யா பறக்க விட்டிருப்பதுகண்டு, அகில உலகமே ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளது! "அங்கே, கண்டோம்! இங்கே தெரிந்தது!!" என்று அமெரிக்கா முதல் ஆபிரிகா வரையிலுள்ள ஒவ்வொரு நாட்டினரும், தகவல் தருகின்றனர். அண்டசராசரங்களும் ஆண்டவன் படைப்பு, சூரிய பகவான் ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேரிலே காலையிலே குணதிசையிலிருந்து புறப்பட்டு மாலையிலே குடதிசையைச் சென்று அடைகின்றான் —வெண்ணிலா, எல்லாம் வல்ல எம்பெருமானும் பரமசிவனின் தலை முடியிலே வீற்றிருக்கிறது —கல்லினுள் தேரையும் கருப்பையில் உயிரும் 'அவனது' லீலா விநோதங்களில் ஒன்றன்றோ!— என்றெல்லாம் பேசிடுவோரைப் பார்த்து விஞ்ஞானிகள் 'சவால்' எழுப்பியிருக்கின்றனர்! புதியதோர் சந்திரன், அதுவும் உலோகங்களால் தயாரிக்கப்பட்ட பாலசந்திரன், வர்னவீதியில் வட்டமிட்டுக்கொண்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, அதனுள் பொறுத்தப்பட்டிருக்கும் ஒலிபரப்புக் கருவி மூலம், சைகைகளும் கிடைக்கின்றன பூமிக்கு! விஞ்ஞானம் பரவத்துவங்கிய காலமுதல், பழைமை எண்ணங்கள், தகர்த்து எறியப்படுகிற அளவுக்கு, எத்தனையோ கண்டுபிடிப்புகள், ஒன்றன்பின்ஒன்றாக முளைத்துக் கொண்டேயுள்ளன. பூமியைத் தட்டை என்றனர் புராணீகர்கள்! நரகாசூரன், பாயாகச் சுருட்டிக்கொண்டு போய்க் கடலுக்குள் ஒளிந்தான் என்றனர் புராணீகர்கள். இங்கு மட்டுமல்ல, உலகம் எங்கணுமே, பூமி தட்டை என்று தான் கருதப்பட்டது. விஞ்ஞானம், வெடிவைத்தது, இக்கருத்துக்கு! பூமி, உருண்டை என்று நிரூபித்தது!! பூமிக்கு மேல் ஆகாயம்—அடடா, வீட்டுக்குக்கூரைபோல ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் நேர்த்தியே நேர்த்தி—அந்த ஆகாயத்துக்கு மேல் என்ன இருக்கிறது தெரியுமோ? இந்திர லோகம், கந்தர்வ லோகம், சுவர்க்கலோகம், என்கிற ஏழு உலகங்கள் உள்ளன! ஒரு உலகம் தேவாதி தேவர்களுக்குச் சொந்தம், இன்னொன்றில் திருமாலிருக்கிறார், அடுத்ததில் பூதகணதிகளோடு ஈசுவரன் உள்ளார், வேறொன்றில் பிரம்மா நான்கு தலைகளோடு உட்கார்ந்துகொண்டு குயவர்கள் மண்பாண்டம் செய்வதுபோல மனிதனையும் மரத்தையும், புல்லையும் பூண்டுகளையும், கடும்புலியையும் ஓடும் மானையும் 'செய்து' கொண்டிருக்கிறார் என்று கதைகள் கட்டப்பட்டன. "அதோ பார்த்தாயா? அம்புலியை! அதற்குள் காலை நீட்டி மடக்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பது யார் தெரியுமோ? அதுதான் ஔவைப் பாட்டி!" என்று குழந்தைகளுக்குக் காட்டி, கதைகள் சொல்லினர். அது ஔவையுமல்ல, பாட்டியுமல்ல, சந்திரனும், பூமியைப்போல ஒரு உலகம் அங்கேயும் காடுகளுண்டு மலைகளுண்டு, அவைகளே இவ்வண்ணம் காட்சி தருகின்றன! பூமியில் வசிப்பதுபோல், சந்திர மண்டலத்திலும் மனிதன் போய் வசிக்கலாம், ஆனால் அங்கு எப்படிப் போய்ச் சேருவது என்றுதான் யோசித்துக்கொண்டிருக்கிறோம், என்று விஞ்ஞானிகள் சொன்னார்கள். இப்போது, அந்த விஞ்ஞானிகளுக்கு விருந்தாக, புதியதோர் சந்திரனையே உலவவிட்டிருக்கின்றனர், ரஷ்யர்கள்! "வானம்" என்று ஒன்று கிடையாது— வீட்டுக்குக் கூரைபோல பூமிக்குக் கூரையாகவும் அது இல்லை—அது ஒரு தோற்றம்தான் — என்று முன்பே அறிவித்திருந்தனர் விஞ்ஞானிகள்!! இப்போது, சந்திரன் ஒன்றைப் பறக்க விட்டிருக்கின்றனர். மணிக்கு 18,000 மைல் வேகத்தில் அது பவனி வருகிறதாம் — ஏ! அப்பா!! நினைக்கவும் பிரமிப்பாயிருக்கிறது— உலகத்தின் எந்த கோடியிலிருப்போரும் காணலாமாம். பொய்யான தகவலாயிருந்தால், இந்நேரம் அமெரிக்காவே, வெளுத்து வாங்கியிருக்கும். ஆனால், அதோ காணமுடிகிறது, மேலே குழந்தைச் சந்திரனை! அது பரப்பிடும் ஒலிகளையும் கேட்க முடிகிறது!! எனவே, உலகமே, இன்றைய தினம் திகைப்பிலும் களிப்பிலும் மூழ்கிக்கிடக்கிறது. பெரியதோர் சாதனை என்போம் இதனை! செய்து முடித்த "ரஷ்யப் பிரம்மாக்களின்" திறனுக்கும் அறிவுக்கும் வணக்கம் செலுத்துவோம்—வாழ்த்துவோம்!!

★

சமாதி

காந்தியடிகள் பிறந்த நாளை சென்ற வாரம்தான் சிறப்பாகக் கொண்டாடினார்கள். டில்லியிலுள்ள அவரது சமாதிக்குமுன், நேருவும் பிற தலைவர்களும் போய் சிரவணக்கம் செய்த செய்திகளையும் கண்டோம்.

விழாக்கோலம் முடியவில்லை! அந்த உத்தமர் தன் வாழ்நாளின் கடமைகளில் ஒன்றாகக் கருதிய 'மது விலக்கு'க்கு சமாதி கட்டப்படப் போகிறது எனும் செய்தி, ஒரிஸ்ஸாவிலிருந்து, வந்துள்ளது, இந்த கிழமை.

மக்களின் ஒத்துழைப்பில்லை! வருமானம் போதவில்லை!!—என்பதோடு, அரசியல் இலாபமும் காரணமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின், அங்கு ஆட்சி அமைக்கவே காங்கிரசார் திண்டாடியதும், காங்கிரசை எதிர்த்த 'ஜார் கண்ட் கட்சி' என்பது ஏராளமான இடங்களைக் கைப்பற்றியதும், பலருக்கு நினைவிருக்கலாம். ஆகவே, கள்ளுக்கடை வியாபாரிகளையும், கண்டிராக்டர்களையும், புதுப்பிப்பதன் மூலம், புதுப்பலம் தேட காங்கிரஸ் முனைவதன் விளைவே, மதுவிலக்குக்கு எழுப்பப்படுகிற இச்சமாதியாகும்.

மதுவிலக்கால் வருமானம் குறைகிறது என்பது உண்மை! மக்களிடையிலும் கசப்பு உள்ளது என்பது பொய்யல்ல!!—ஆனால், அது ஒரு பெரிய தீங்கு என்பதும், குடியினால் கெட்ட குடிகள் பலவுண்டு என்பதும், யாவரும் அறிந்ததாகும். ஆதலால்தான் காந்தியடிகள் அவ்வளவு பிடிவாதமாக யிருந்தார். ஆனால், டில்லி தர்பாரில், உடையும் 'பாட்டில்கள்' கொஞ்ச நஞ்சமல்லவாம்! பல தலைவர்களுக்கே மதுவிலக்கில் அசிரத்தை ஏற்பட்டு வருகிறது!!

“நாங்கள் மதுவிலக்கைக் கைவிடமாட்டோம்”, என அமைச்சர் பக்தவத்சலம், அறிவித்திருப்பதாக செய்தி பெறுகிறோம். இந்த உறுதி 'நேரு தலையிட்டாலும்' இங்கு, நிலைத்திருக்க வேண்டும் எனவும் விரும்புகிறோம். மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்த வழிவகைகள் செய்வதே ஒரு திறமையான அரசுக்கு அழகே ஒழிய, சமாதி கட்டுவது, அல்ல. ஒரிஸ்ஸா, இதன் மூலமும் அரசியல் லாபம் பெற எண்ணுகிறது. அந்தோ, காந்தியடிகளே! நீர் வளர்த்த கொள்கைகளுமா, இப்படி 'சமாதி' கட்டப்பட வேண்டும்!!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

இவன் எட்டிப்பார்த்ததைக் கண்டு திரும்பி இவனைப் பார்த்துவிட்டு மேடையில் கவனம் செலுத்தினார்! இவனுக்கோ குழப்பமும் சஞ்சலமும அதிகமாயிற்று. அதிலும், அந்த ஆள் பெரிய அதிகாரியென்று தெரிந்தது. அவருடைய உடை, அவர் ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி என்பதைக் காட்டிற்று. இவன் ஒரு தாலுகாபீஸ் குமாஸ்தாதான்! என்றாலும் ஒரு நாளைக்கு அந்த அதிகாரியின் பார்வையில் படாமலாயிருப்பான்? அவர் தயவு தேவைப்படாமலாயிருக்கும்? “நான் அவர் பக்கம் தும்மிவிட்டேனே!” என்று எண்ணினான். “செச்சே! இரண்டு தடவைகள் திரும்பிக்கூடப் பார்த்தாரே. நம்மை நன்றாக அடையாளம் தெரிந்துகொண்டிருப்பார்” என்று நினைத்தான். “இப்போதே அவரிடம் மன்னிப்புக்கேட்கவேண்டும்! இல்லாவிடில்......?” என்று இதயம் சொல்லியது. நாட்டியத்தின்மீது கவனம் செல்லவில்லை. மனப்போர் நடந்தது. கடைசியில், “சார்!” என்று கூப்பிட்டான். திரும்பிப் பாராமலேயே அவர் 'ஊம்!' என்றார். “திரும்பிக் கூடப் பார்க்கவில்லையே! என் நடத்தை அவருக்கு அவ்வளவு கோபத்தை உண்டாக்கியிருக்கிறது போலும்” என்று கருதினான். அவன் மனம், வேகவேகமாக அடித்துக்கொள்ள ஆரம்பித்தது.

“சார்! தெரியாமல் தும்மிவிட்டேன்... என்னை மன்னிக்கவேண்டும்.”

“சரி, சரி.”

அவர் அலட்சியமாகவும், இதைப் பொருட்படுத்தாதவர் போலவும் பதில் தந்தார். குமாஸ்தாவுக்கோ நிம்மதி ஏற்படவில்லை! சரி, சரி—என்று அவர் சாதாரணமாகச் சொன்னது, தன் மீதுள்ள கோபத்தினால்தான் என்று மேலும் குழம்பலானான்!!

“நான் வேண்டுமென்று செய்யவில்லை சார். அடக்கமுடியவில்லை, அதனால்...”

வார்த்தையை முடிக்கவில்லை இவன். அவர் கோபமான குரலில் சொன்னார்,

“அட சரிதான் சும்மாயிரப்பா!” நாட்டியத்தை ரசிக்கும் ஆர்வத்தில்தான் அவர் இப்படிச் சொன்னார். ஆனால் அவனுக்கு அப்படித் தோன்றவில்லை. பெரிய தவறு செய்துவிட்டோம் என்கிற உணர்ச்சி வலுத்துவிட்டது. நாற்காலியில் சாய்ந்தபடியே யோசிக்கலானான். எதிரே மேடையில், இனிய காட்சிகள் பல நடந்தன. எதுவும் அவனைக் கவரவில்லை. அவன் கவனமெல்லாம், தான் செய்த தவறுக்கு எப்படிப் பரிகாரம் தேடுவது என்பதிலேயே இருந்தது. ஒருவாறு நாட்டியம் முடிந்தது. அந்த அதிகாரி வெளியேறு முன், அவர் பின்னால்போய், “சார்!”, என்றான். இவனால் சலிப்புண்டுபோன அவர், “பேசாமல் போகிறாயா! இல்லையா!”, என்று அதட்டினார். வீட்டுக்குத் திரும்பினான். மனம், அலைகடல் துரும்பாயிற்று. படுத்தான், தூக்கம் வரவில்லை. அவன் புரண்டு புரண்டு படுப்பதைக் கண்ட அவன் மனைவி, “என்ன விஷயம்?”, என்று கேட்டாள். விபரம் எல்லாம் சொன்னான். கணவனுக்கு ஆபத்து வந்துவிட்டால் என்ன செய்வது என்கிற பயன் வந்துவிட்டது அவளுக்கு. ஏனெனில் இவன் விவரித்தது அப்படியிருந்தது. அதைக்கேட்ட அவள், “அப்படியானால் காலையில் முதலில் அவர் வீட்டுக்குப்போய், மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வாருங்கள்! நீங்கள் தும்மினீர்கள் என்றுதான் எண்ணினாரோ அல்லது வேண்டுமென்றுதான் காரித்துப்பினீர்கள்—என்று நினைத்துக் கொண்டாரோ? நாம் என்ன கண்டோம்! நமக்கேன் பெரிய இடத்துப் பொல்லாப்பு”, என்றாள். அவன் மனதுக்கு இந்த யோசனை சரி என்று பட்டது.

*

போலீஸ் அதிகாரியின், வீட்டு முன் கூடத்தில் அவரைப்பார்க்க வந்தபலர் வந்திருந்தார்கள். மனு—புகார்—முதலியவைகளை வைத்துக்கொண்டு பலர் காத்துக்

(15-ம் பக்கம் பார்க்க)

பதில் சொல்லுங்கள்!

"மலேயாவில் சமீபகாலம்வரை யில் இலங்கையின் ஹைகமிஷன ராக இருந்த மாணிக்கம் சரவணமுத்து, சென்ற வாரம், கொழும்பு விவே கானந்த சபையில் ஒரு அருமை யான சொற்பொழிவு நிகழ்த்தி னர். அப்பொழுது, தமிழ்க் கலா சாரம் வேதகாலத்துக்கு முற் பட்ட கலாசாரமென்றும், உலகில் மிகமிகத் தொன்மைவாய்ந்த தென்றும்; தமிழ்க் கலாச்சாரத் தையும் தமிழ் மொழியையும் ஓராயிரம் சட்டங்கள் வந்தால் கூட அழிக்க முடியாதென்றும் அவர் கூறினர். மொகஞ்சதாரோ நாகரிகம் திராவிட நாகரிகமென் பதில் சந்தேகத்துக்கு இடமில்லை யென்று "பாரத"ப் பிரதமர் நேரு தமது புத்தகத்தில் குறிப்பிட்டி ருப்பதை சரவணமுத்து சுட்டிக் காட்டிக் கிரேக்க, பாபிலோனிய, எகிப்திய நாகரிகங்களெல்லாம் அழிந்த பின்னரும் தமிழ் நாக ரிகங்களெல்லாம் இன்றைக்கும் நிலைத்திருப்பது காலவெள் ளத்தையெல்லாம் வெல்லும் மகத்தான சக்தி தமிழ் நாகரிகம் ஒன்றுக்கு மட்டுமே உண்டு என் பதை உலகரிய நிரூபணம் செய் கிறது என்றார்."

*

வெள்ளத்தையெல்லாம் வெல் லும்! உலகில் மிகமிகத்தொன்மை யான கலாசாரம்! திராவிட நாக ரிகம்பற்றி நேருவே சொல்லியிருக் கிறார்! — அறிவும் ஆராய்ச்சியும் கலக்க, இவ்வண்ணம் பேசப்பட்ட இடம், இங்கல்ல; இலங்கையில். பேசியவரும, ஒரு தி. மு. க. அல்ல; மலேயாவில் சமீபகாலம் வரையில் இலங்கை சர்க்காரின் சார்பில் ஹைகமிஷனராக இருந் தவர். பேசப்பட்ட இடமோ, விவேகானந்த சபை!!

"ஏது உனக்கு இச் செய்தி? இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தார் அனுப்பினரோ?" என்று கேட்பீர்கள். அல்ல தோழர்காள் அல்ல; 6—10—57 'கல்கி' இதழ், கவலையோடு இத் தகவலைத் தருகிறது!! பேசப்பட்ட இடம், பேசியவர், பேசியபொருள், அதனை நமக்குத் தருகிற ஏடு, இவையனைத்தையும் பார்க்கிற பொழுது வியப்பு விரியும். எங் கிருந்தெல்லாமோ கேட்கிறது திராவிடக் கீதம்!—எனும் ஆனந் தம் அதிகமாகும்.

தமிழரின் சிறப்பு, திராவிடத் தின் புராதனப்பெருமை குறித்து, நாம் எதிர்பாராத இடங்களிலிருந் தெல்லாம், எதிர்பாராதவர்கள் எல்லாம் பேசத் தலைப்பட்டிருக் கிறார்கள்.

இலங்கையில் இக்குரல்! எழுப்பு கிறார் முன்னாள் ஹைகமிஷனர்! 'கல்கி' ஏடு தருகிறது, தகவல்!!

*

"திராவிடர்" குறித்து இதோ, ஒரு தகவல், நமது கவனத்துக்கு வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டும்தான் என் பதல்ல "இலங்கையிலும் திரா விடர்" என்பதுபற்றி எழுது கிறார், ஜி. சி. மெண்டிஸ் பி. ஏ. பி. எச். டி. "இலங்கையின் பூர்வ சரித்திரம்" எனும் ஆங்கில நூலில். நவாலி யூர் சோ. நடராசன் என்பார், தமி ழில் இந்நூலினை மொழி பெயர்த்து வழங்கியுள்ளார். "திராவிடர்" எனும் தலைப்பில் அவர் நூல் கூறுகிறது:—

"சிங்களச் சாதிக்கு ஆக்கம் கொடுத்த இன்னொரு சாதியினர் திராவிடர். இவர்கள் இத் தீவில் எப்பொழுது குடியேறினர்கள் என்பதைப்பற்றி அறிவதற்குரிய சான்றுகள் கிடையா. சில காலங் களில் இலங்கையைக் கைப்பற் றும் நோக்கமாகவும் சில காலங் களில் சமாதானக் குடிகளாகவும் திராவிடர் இலங்கைக்கு மிகப் பழைய காலம்தொட்டே வந்து கொண்டிருந்தார்கள். இவர்களில் பெரும்பாலோர், சிங்களவருடன் கலந்து அவர்களது மொழியையே கைக்கொண்டு சிங்களவராஞர்கள். கரைப் பிரதேசங்களில் சிங்கள மொழியைப் பேசுந் திராவிடரை இன்றுங் காணலாம்... ஆரியர் என்ற சொல் தனிப்பட்ட ஒரு சாதியாரைக் குறியாமல் ஆரிய மொழி பேசும் எல்லா மக்களையும் குறிப்பதுபோல திராவிடர் என்ற பதமும் தமிழ், மலையாளம், கன்ன டம், தெலுங்கு ஆகிய திராவிட மொழிகளைப் பேசும் மக்கட் கூட் டத்தினரைக் குறிப்பிடும் ஒரு பெயர் எனக் கூறலாம். ஆரியர் இந்தியாவுக்குள் நுழைந்த காலத் தில் திராவிடர் தென்னிந்தியா விலும் வடக்கே பெரும் பகுதி யிலும் பரவியிருந்தார்கள்— [இருக்குவேதத்திற் காணப்படும் 'த' வர்க்க எழுத்துக்கள் திராவிட மொழிக்கே சொந்தமானவை, பார சீகம் முதலிய ஏனைய இந்து ஐரோப்பிய மொழிகளில் இவ் வெழுத்துக்கள் இல்லை. எனவே, ஆரியர் இவ்வக்கரங்களை வட இந்தியாவிற் குடியிருந்த திராவிட ரிடமிருந்தே பெற்றிருக்கவேண் டும்]பலுசிஸ்தானத்தில் பிராகுயி என்றெரு மொழி பேசப்படுகிறது. இது திராவிடச் சார்புடையது.

கிருஸ்துவசகாப்தத்தின் ஆரம்ப காலந்தொட்டுச் சில நூற்றாண்டு களாகத் திராவிடர் சிங்கள சாதி யின் ஆக்கத்துக்குத் துணைபுரிந்தே வந்திருக்கிறார்கள்...... சோழர் இலங்கை மீது படையெடுத்து வெற்றிகொண்டு அரசு நடத்திய காலத்திலும் பின்னர் பாண்டிய ராட்சிக் காலத்திலுந்தான் திராவிடராதிக்கம் உச்ச நிலையை அடைந்தது. பதின்மூன்றும் நூற் றுண்டின் ஆரம்பத்தில் திராவிடர் வட இலங்கையில் ஒரு இராச்சியம் கண்டு தனியரசு நடத்தினர்கள், பதினைந்காவது நூற்றாண்டில் தென்னிலங்கையிலுள்ள இராசாக் களிடம் திறையும் வாங்கினர்கள். தமது நாகரிகத்தைப் பரப்பினர் கள்"

டாக்டர் ஜி. சி. மெண்டிஸ், சரித்தப்பேராசிரியராக இருந்தவர்! அவர், திராவிட நாகரிகம் திசை யெங்கும் பரவியிருந்ததென்பதை இலங்கையின் சரித்திரத்தில் எழுது கிறார் இவ்விதம்!! திராவிடர், சிங்களவரின் ஆக்கத்துக்கு அன் றோர்நாள் துணைபுரிந்தனர்— இலங்கையின் வாழ்வில் இரண்

டறக் கலந்தனர் என்கிறார், இப் பேராசிரியர்.

✱

''திராவிட மொழிகள் என்பவை இந்தியாவிலேயே தனிச் சிறப் போடு விளங்கும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் என்னும் இந்நான்கு மொழிகளா கும். இவை, இலக்கிய வளம் செறிந்த மொழிகளாகும். இந்த மொழிகள் யாவும் ஒரே குடும்பத் தைச் சேர்ந்தவை என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

ஏதோ கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசங்கள் தென்பட்டாலும், இவைகளுக்குள் ஒரு பந்தம் இருக்கிறது. இந்த நான்கு மொழி களும், ஒரு திராவிட மொழி யிலிருந்து வந்தவையே யாகும். இந்த மொழியினை, புராதன திரா விட மொழி எனலாம். அது இன்றைக்கு 3500-ஆண்டுகளுக்கு முன்பே தனி மொழியாக இயங்கி யிருக்க வேண்டும்.

இந்தப் புராதன திராவிட மொழியினின்றும் பல சொற்களை, ஆரிய மொழி பெற்றுக்கொண் டிருக்கிறது. சமஸ்கிருதத்தில் காணப்படும் பல சாதாரண சொற் கள்கூட திராவிட மொழியைச் சேர்ந்தவை என்று இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கன் னட மொழியில் பொருளகராதி தயாரித்துள்ள கிட்டல் 450-சொற் களுக்கு மேல் பொறுக்கி, இவை யெல்லாம் திராவிட மொழியி லிருந்து சமஸ்கிருதத்துக்குப் போனவை என்று விளக்கியுள் ளார்.

நீரா (நீர்), மீனம் (மீன்), சினிகா (புளி), கால (காலம்), கலா (கலை), மயூரா (மயில்), சந்துளா (புலி), நகரா (நகரம்) போன்றவைகள் எல்லாம் திராவிட மொழியி லிருந்து சமஸ்கிருதம் கடன் வாங் கிக்கொண்ட சொற்களேயாகும். இப்படி சமஸ்கிருதம், திராவிட மொழிகளினின்றும் பல சொற்க ளைப் பெற்றுக்கொண்டது. ஆனால் பிறகு, திராவிட மொழிகளுடன் அதிகம் கலக்கவும் செய்தது.

ஏனைய மூன்று மொழிகளையும் விட, பழைய திராவிட மொழி யாகவே இன்றும் தன்னைக் காப் பாற்றிக்கொண்டிருப்பது 'தமிழே யாகும்.''

இவ்வாறு திட்டுகிறவர் சுநீதி குமார் சாட்டர்ஜி எனும் வங்காளப் பேராசிரியர்! கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'ஹிதவாடா' எனும் ஆங்கில ஏட்டிலே செப்டம் பர் 22ந்தேதிய இதழில் சாட்டர்ஜி யின் இக்கருத்துக்கள் வந்துள் ளன! இந்த ஏடு, நம்முடைய தல்ல; காங்கிரசின் முரசு!!

✱

திராவிடர்—திராவிட மொழி—அதன் சிறப்பு—வெள்ளத்தால் அழியாது எனும் மகிழ்ச்சி — குறித்தெல்லாம் எங் கெங்கிருந்தோ, இன்பத் தேன் வந்து பாய்வதுபோல, பெறு கிறோம், இன்று. திராவிடமா வது! ஆரியராவது!! — என்று ஏசிய நாட்கள், உதயசூரியனைக் கண்ட பனிபோல, இன்று வில கிக்கொண்டுள்ளன. நம் குரல், எங்கெங்கிருந்தோ கேட்கிறது! அவைகளை எடுத்துப் போடு வதே 'பாபம்' என்றிருந்த ஏடுகள் யாவும் இன்று தாராளமாக வெளியிடுகின்றன!!

புகழ் மணம் பரவி வருகிறது— தமிழர் என்றோர் இனமுண்டாம், தனியே அவர்க்கோர் குணமுண் டாம், அமிழ்தம் அவனுடைய மொழியாகும், அது ஒரு காலத் திலே உன்னத நிலையிலேயிருந் தது, அதோடு சேர்ந்தவையே கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும். திராவிட மொழிகள் இவையே. தனிக் கலாச்சாரம் கொண்டவை, தன் னிகரற்று விளங்கியவை எனும் கருத்துக்கள், இன்று எங்கும் எதிரொலிக்கின்றன.

ஆனல்! ஆனல்!! இவ்வளவு கீர்த்திவாய்ந்த இனத்தையும் மொழியையும், சிங்கத்தை சிறு எலி விழுங்கிய கதைபோல், அழுத்தி வெற்றிகொள்ள வடவ ரால் அவிழ்த்துவிடப்படுகிறது, இந்தி.

அதுதான், அரசாங்க மொழியாம்!
அதுதான், நீதிமன்ற மொழியாம்!
அதுதான். உத்தியோக மொழியாம்!
கார்டிலும் கவரிலும் அதுதானும்!
காசிலும், வானொலியிலும் அதுதானும்!

இன்னும் பத்தாண்டுக்குள், எங்கும் இந்திமயமாகுமாம்!!

இதயம் ஏன் குமுறுது நமக்கு? நறுமலரினைப் பார்த்து நரகல் கேலிசெய்யக் கேட்டிருப்பரோ நல் லோர்! எனவேதான், இந்தியைத் திணிக்க வடவர் செய்யும் தந்திரங் களைக் காணக் காண, எரிமலை யாகிறது இதயம்.

வேதகாலத்துக்கு முற்பட்ட கலாச்சாரம் உடையது என்கிறார் சரவணமுத்து! சிங்களத்துக்கும் ஆக்கம் தந்தனர், என்கிறார் மெண்டிஸ்! தனித்தன்மை வாய்ந் தது என்கிறார் வங்காளப்பேராசிரி யர்!

இவர்கள் மட்டுமோ? பெருமை யினை எடுத்தோதியோர், எண் ணற்றோர்! இருந்தும், பிடிவாத மாக, இந்தியினையே திணிப் போம் எனக் கூறிடின், ஏற்றிட நாம் என்ன ஊமைகளோ, அன்றி ஆமைகளோ!!

★

திருக்குறள் வகுப்பு

—✱—

சென்னை பெத்துநாயக்கன் பேட்டை, முருகேச முதலித் தெரு, 2-ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில் ஒவ்வொரு புதன் கிழமை மாலை 6-30 மணிக்குத் ''திருக்குறள் வகுப்பு'' புலவர் கா. சி. தனக்கோட்டி (தமிழ் ஆசிரியர், தொண்டை மண்டலம், உயர்நிலைப் பள்ளி, சென்னை) அவர்களால் நடத்தப்படும். அனைவரும் வந்து பயனடையுமாறு வேண்டுகிறோம்.

பெண்களுக்குத் தனி இடம் உண்டு.
அனைவரும் திரண்டு வருக.
இங்ஙனம்,
மணவழகர் மன்றத்தினர்

ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 6-30 மணிக்குக் கூடும் நக்கீரர் பட்டி மன்ற விவாதத்தில் கலந்துகொள்ளுங்கள்.

ஏழைச் சிறுவர் சிறுமியர் நலனுக் காக டாக்டர் சி. நடேசனர் இரவு பாட சாலை தினம் மாலை 6-30 மணிமுதல் 8-15 மணிவரை நடைபெறுகிறது.

திரு. வி. க. நூல் நிலையத்தைப் பயன் படுத்துங்கள்.

பெத்துநாயக்கன்பேட்டை மாணவி களின் நலனுக்காக விரைவில் டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கப்படும்.

மணவழகர் மன்றம்
பெத்துநாயக்கன்பேட்டை :: சென்னை-1
[துவக்கம் 1957]

அன்றே கிளம்பிய சங்கநாதம்

1938!—தமிழினம் எங்ஙனம் மறக்கமுடியும் இதனை? தாளமுத்து—நடராசன் எனும் இருவீரர்கள் பிணமாகவும், ஆயிரக்கணக்கானோர் வெஞ்சிறை செல்லவும் காரணமாக அமைந்த இந்தி எதிர்ப்பு, அன்றுதான் நிகழ்ந்தது தமிழகத்தில். அறப்போர் துவங்குமுன், **27—2—38** அன்று காஞ்சியில் ஒரு இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. ஆந்திரத்தைச் சேர்ந்தவரும், பிறகு ஆந்திரப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகயிருந்தவரும், சிறந்த அறிஞருமான சர். கே. வி. ரெட்டி தலைமை தாங்கினர். கேரளத்து அறிவியல் மேதையான, கிருஷ்ணன் நாயர் மாநாட்டினைத் துவக்கிவைத்தார். தமிழகம் மட்டுமல்ல, திராவிடமே இந்தியை எதிர்த்ததன் அடையாளமாக விளங்கிற்று அம்மாநாடு! அப்போது, மறைந்த அப்பெரியவர்கள், எழுப்பிய முழக்கம் இப்போதும் நமது செவிகளில் ஒலிக்கிறது. இன்று எழுப்பப்படும் பல கேள்விகளுக்கு அவர்கள் அப்போதே, பதிலளித்திருக்கிறார்கள். வளர்ந்து வரும் திராவிடப் பாசறையினர், பலருக்கு, அதை மீண்டும் இச்சமயத்தில் கவனமூட்ட, அவர்தம் பேச்சுகளின் சில பகுதிகளைத் தருகிறோம்.

இந்தியைக் கட்டாயப்படுத்துவதற்கு இப்போதுள்ள அரசினர் காட்டுகிற ஒரு காரணம், ஐககிய உணர்ச்சி ஏற்பட வேண்டும் — மாகாணங்களுக்கிடையே பழக ஒருமொழி வேண்டும் என்பதுதான். இதுபற்றி, சர். கே. வி. ரெட்டி வழங்கிய கருத்து இதோ:—

இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதற்கு ஏதாவதொரு காரணத்தை கூற வேண்டுமானல், மகாணங்களும், சுதேச சமஸ்தானங்களும் ஒன்ருகவும் பொதுமக்களிடை ஒரு ஐக்கியஉணர்ச்சி ஏற்பட, யாவரும் ஒருதேசமக்கள் என்றஉணர்ச்சிவளர ஒரு பொதுமொழி தேவை, என்பதைத்தான் கூறமுடியும்,

அந்த ஒரு காரணந்தான் ஏதோ பார்வைக்காவது காரணம் போல் தோற்றக்கூடும். இவ்விதம் பார்த்தால், இது அரசியல் நோக்கத்துடன்வரும் திட்டமென ஏற்படுமே தவிர, கல்வித் துறையிலுள்ள கொள்கை, இலட்சியங்களுடன் சம்மந்தப்பட்டதல்ல என்பதும் விளங்கும்.

தேசபக்தி வளரவோ, தேசிய ஒற்றுமை பலப்படவோ, மக்கள் ஒன்று கூடவோ, ஒரு பொது மொழி அத்யாவசியந்தானு? சரித்திரம், மாறுபட்ட உண்மையையே சாற்றுகிறது.

கனடாவைப் பார்ப்போம். அங்கு 'பெடரல்' அரசியல் இருக்கிறது. அங்கு இப்போதும், பிரான்சு, இங்கிலீஷ் ஆகிய இருமொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. 1791-ம்ஆண்டு சட்டம் ஏற்பட்டதிலிருந்து.

குயூபெக் சட்டசபையில், பிரன்ச்சு இங்கிலீஷ் ஆகிய இருமொழிகளும், உபயோகிக்கப்படுகின்றன. இருமொழிகளும் உபயோகிக்கப்பட வேண்டும் என்பது, அரசியல் அமைப்பில் திருத்தங்கள் ஏற்பட்டநாள் தொட்டு, நடைமுறையிலே காட்டப்பட்டே வருகிறது.

தென் ஆப்பிரிக்காவை எடுத்துக் கொள்வோம். அங்கு இரு ஜாதியினர் இருக்கின்றனர். இரு மொழிகள் இருக்கின்றன. ஆங்கிலேயருக்கு இங்கிலீஷ், போயர்எனப்படும் டச்சுக்காரருக்கு டச்சுமொழி, இன்றும் இருந்து வருகிறது.

சிவிட்ஜர்லாண்டு தேசத்திலே மூன்றுவித ஜாதியினர் உள்ளனர் மூன்றுவித மொழிகள் பேசப்படுகின்றன. ஆனல் தேசம் ஒன்றுதான். தேசிய ஒற்றுமையும் உள்ளது.

***1874**வது ஆண்டு நிறைவேறிய சமஷ்டி சட்டத்தின்படி ஜெர்மன், பிரன்ச்சு, இதாலியன் ஆகிய மூன்று மொழிகளும், தேசிய மொழிகளாக ஏற்படுத்தப்பட்டன!*

இவைகளையெல்லாம் கவனிக்கும்போது, இந்தியாவிற்கு ஒரு பொதுமொழி அவசியமில்லை என்பது நன்கு விளங்கும். பல நூற்றுக்கணக்கான மொழிகள் பரவி உள்ள, மகாணங்களிலும், சுதேச சமஸ்தானங்களிலும் ஒரு புது பொது மொழியைப் பரப்பி நிர்ப்பந்தப்படுத்துவதென்பதும் சாத்தியமான காரியமாகாது.

இந்தியைக்கட்டாய பாடமாகப் புகுத்தினுல் இந்த மாகாணத்திற்கு, மற்றைய மாகாணத்துடன் சம்பந்தப்படுவதால் உண்டாகும் நிலைமையை இனிக் கவனிப்போம். மத்திய சர்க்கார் (இந்திய சர்க்கார்) கல்கத்தாவில் இருந்தபோது, சர்க்கார் உத்தியோக மண்டலம் பூராவும் வங்காளிகளிடம் இருந்தது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சர்க்கார் தலைமை ஸ்தானத்தை டில்லிக்கு மாற்றிய பிறகு, உத்தியோக மண்டலம் பஞ்சாபிகள், ஐக்கிய மாகாண வாசிகளின் வசமாயிற்று.

ஆனல் மதருசுக்கு என்றும்

போக்கிடமில்லாதிருந்தது. சென்னை மாகாணத்தைக் கண்டாலே வடநாட்டாருக்கு அலட்சியம்.

சென்னைக்குப் பல அநீதிகளையும் இழைத்திருக்கிறார்கள். உதாரணமாக, **மாண்டேகு செம்ஸ்போர்டு** சீர்திருத்த சட்டகாலத்தின்போது ஆண்டுதோறும் 350 லட்ச ரூபாய் **மெஸ்டன் தீர்ப்பு** என்ற திட்டத்திற்கிணங்க, சென்னை மாகாணம், மத்திய சர்க்காருக்குக் கொட்டிக் கொடுத்துக்கொண்டு வந்தது.

*

மனிதனுடைய கருத்துக்களை, மொழி எவ்வளவு தூரம் உருவாக்குகிறது என்பதை இன்றைய (காங்கிரஸ்) சர்க்கார் உணரவில்லை.

மக்களுடைய மொழியை ஒட்டியே மனோ வளர்ச்சி இருக்கிறது. குழந்தைகளின் கருத்து வளர்வதும், பிறகு வாழ்க்கையிலே இலட்சியங்கள் ஏற்படுவதும் மொழி கலை அறிவு ஆகியவைகளினாலேயேயாகும்.

தமிழெங்கே? இந்தி எங்கே? இரண்டிற்குமா ஒப்பிட்டுப் பார்ப்பது! தொல்காப்பியம் என்பது ஒரு இலக்கண நூல். ஒரு மொழி நல்ல வளர்ச்சி அடைந்த பிறகுதான் அதற்கு இலக்கண நூல் தேவையாக இருக்கும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழ்மொழி ஒரு உன்னத வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது விளங்கும். தமிழ் மொழி, பண்டைக்கால மொழி என்பதோடு கவர்ச்சி, வனப்பு நிரம்பிய மொழி. அதன் அடிகளை நெருங்கவும் இந்தியினால் முடியவே முடியாது. "கவிதை இயற்றும் வகைக்கு ஏற்றபடி மொழியை வளர்த்ததில், சமஸ்கிரதத்தை விட தமிழே நிகரற்றது" என **டாக்டர் பர்னல்** கூறுகிறார்.

டில்லியிலே நமக்கு (சென்னை மாகாணத்தினருக்கு) செல்வாக்கே கிடையாது. நமது உணர்ச்சிகளை மதிப்பதில்லை. முன்பு வங்காளம், இப்போது பஞ்சாப், ஐக்கிய மாகாணம் ஆகியவைகள், நம்மைத் தமது அடிமைகளெனவே கருதி வருகின்றன.

நாம் நமது சம உரிமைக்காக எழ வேண்டும். இதர மாகாணங்களுக்கு இருப்பதைப்போலவே, இந்திய சர்க்கார் நிர்வாகத்திலே நமக்கும் உரிமையும் பங்கும் இருக்க வேண்டும்.

இந்தி மொழிக்கு விட்டுக் கொடுத்தால், அது வடநாட்டு மாகாணங்களுக்கு அடங்கி நடக்கும் சாதுக்கள் நாம் என்பதற்கு மற்றொரு உதாரணம் என்றுதான் கருதமுடியும்.

இந்தியர்களில் பெரும்பான்மையினர் (மெஜாரடி) இந்திமொழி பேசுகிறார்கள் என்று கூறுவது ஆதாரமற்றது. சுத்த அபத்தம்.

வங்காளிகள் இந்தி மொழியை சட்டைசெய்வதில்லை. முஸ்லீம்கள் கட்டாய இந்தித் திட்டத்தை எதிர்க்கிறார்கள். அவர்கள் என்றும் விரும்புவது உருதுமொழியேயாகும்.

இந்தி திணிக்கப்படுவதை, பம்பாய் மாகாணத்திலுள்ள கன்னட மொழி பேசுபவர்களும், மராட்டியரும், கடுமையாக எதிர்க்கிறார்கள்.

சிந்து, அஸ்ஸாம், பஞ்சாப் ஆகியவைகளும், இத்தகைய முறையை எதிர்த்தே தீரும்.

தன்னைப்பெற்ற தாய், தாய்நாடு தாய்மொழி, ஆக ஒருவனுக்கு மூன்று தாய்மார் என்று நமது முதுமொழி கூறுவதுண்டு. தாயைக் கவனியாதவன் மாதாவிற்குத் துரோகம் செய்தவனாகிறான், தாய் மொழியைப் பாராட்டாதவன் தாய்மொழியைக் காட்டிக்கொடுத்த துரோகியாவான்.

ஏசுநாதரைக் கொஞ்சப் பணத்துக்காகக் காட்டிக்கொடுத்த ஜூடாஸ் என்று தாய் மொழியை காட்டிக்கொடுப்பவனை நாம் கூறுவோமாக. ஜூடாஸ் செய்த சதி காரணமாக ஏசுநாதர் கொல்லப்பட்டார்.

ஆனால் கிருஸ்து மார்க்கம் நிலைத்து நிற்கிறது. அதுபோன்றே திராவிட மொழிகளும் நிலைத்து நிற்குமாக."

★

இந்தி படிக்காவிடில், நாளைக்கு வேலை கிடைக்காது!-என்று பயமுறுத்துவோரும் உள்ளார்கள். அவர்களுக்குப் பதில் தந்துள்ளார், கிருஷ்ண நாயர் இன்றல்ல; 19 ஆண்டுகளுக்கு முன்பே. அதோடு, அப்படியொரு மொழி தேவையானால், அது எது என்பதையும், அதற்கு இந்தி எவ்விதத்திலும் இலாயக்கில்லை என்பதையும் தெளிவாக்கியுள்ளார். அது, இது:—

"தென்னாட்டிலுள்ள படித்து வேலையில்லா வாலிபர்கள், வடநாடு சென்று வேலைபெற இந்தி உதவும் எனக் கூறப்படுகிறது. முன்னே கூறியுள்ளபடி பள்ளிக்கூடங்களிலே இளம்பிராயத்திலே நிர்ப்பந்தமாகப் புகுத்தப்பட்ட இந்தி மொழியை, தென்னாட்டு வாலிபர்கள், வேலையைத் தேடிக்கொண்டு வடநாடு செல்லும் பிராயம் வந்ததும், மறந்தே விட்டிருப்பார்கள்.

இந்தியை அவர்கள் மறந்துவிடவில்லை என்று வைத்துக்கொண்டாலும், வடநாட்டிலே இந்த படித்த பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்குமென்ற நிச்சயமுமில்லை. இந்தி தெரிந்திருந்தால் தென்னாட்டு பி. ஏ.க்களுக்கு வடநாட்டில் வேலை கிடைக்கும் என்ற இந்த கூற்று சுத்த அபத்தமென்பது, 1937-ம் ஆண்டு, மே மாதம் 31-ந் தேதி **லண்டன் கிழக்கிந்திய சங்கத்திலே, லார்டு லோதியன் தலைமையிலே கூடிய கூட்டத்திலே, சர். டேஜ்பகதூர் சாப்ரு அவர்கள் வாசித்த, "இந்தியாவிலே கல்வியும் வேலையில்லாத் திண்டாட்டமும்"** என்ற பிரசங்கத்தைப் பார்ப்போர் நன்கு உணர்வர்.

காங்கிரஸ் பல இடங்களில் கூடினதற்கும் சமுதாய, தொழிலாராய்ச்சி சம்மந்தமான, பற்பல மாநாடுகள், பல சமயங்களில் இந்தியாவிலே பல முக்கியமான இடங்களிலே நடைபெற்றதற்கும் ஆங்கிலமேதான் காணம். காங்கிரஸ் அரசாட்சி செலுத்தும் பல மாகாணங்களிலும், சட்டசபைகளில், நடவடிக்கைகள் தாய் மொழியில் நடைபெறவில்லை, ஆங்கில பாஷையில்தான் நடைபெறுகிறது.

பல்வேறு காரணங்களால், ஆங்கில மொழி, நம் நாட்டிலே, மதிக்கப்படும் விருந்தாளியாக வந்தாகி விட்டது. அது நிரந்தரமாக நிலைத்து நிற்கும் தகைமைத்தது. வளர்ச்சி கவர்ச்சி நிரம்பிய மொழி எவ்வளவு நுட்பமான, புலப்படுத்துவதற்கான எண்ணங்களாயினும், அந்த மொழியிலே அழகுபெற விளக்கமுடியும், விஞ்ஞானம் போன்ற விலைமதிக்கொணா வித விதமான பல மணிகள் ஜொலிக்கும் மொழி.

ஆங்கிலத்தால் தேசபக்தி போய்விட்டதாக கூறுகிறார்கள். தேசபக்தி என்ற தத்துவத்தைச் சரியாக உணர்ந்துகொள்ளாமல், "ஆங்கிலம், அன்னிய மொழி, அதை உதறித்தள்ளுவோம்" எனக்கூறி, பொதுமக்கள் விருப்பத்திற்கு மாறாக, தேசத்தின் ஒரு பாகத்திலே மட்டும் நிலவிவரும் இந்தியை, அகில இந்தியர் பொது மொழியாக்க வேண்டுமெனக் கூறுவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை.

அக்காரியமும் பலிக்காது. கிரிக்கட் (Cricket) விளையாட்டை, தேசிய விளையாட்டாகக் கொள்ளலாமா என்ற விஷயத்திலே, சென்னை மந்திரிகளுள் அபிப்பிராய பேதமிருந்தது.

கிரிக்கட், அன்னிய தேசத்தாரின் விளையாட்டு, ஆகவே அதை நாம் வெறுத்து விலக்க வேண்டுமென, சில மந்திரிகள் கருதுகிறார்கள். என் நண்பர், கனம். டாக்டர் சுப்பராயன் தமது சகாக்களுடன் இவ்விஷயமாகப் பலமாக மாறுபடுகிறார். கிரிகட் விளையாட்டை இந்திய தேசிய விளையாட்டாகக் கொள்ளவேண்டுமென ஆதரித்துக் கூறுகிறார். டாக்டர் சுப்பராயன் கூறுவதை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அதைப்போலவே அன்னிய மொழிகளாக இருப்பினும், இங்கிலீஷையே இந்தியாவிற்குப் பொது பாஷையாக்க வேண்டுமென நான் கூறுவதை அவர் சம்மதித்து ஏற்றுக்கொள்வார் என நம்புகிறேன்.

ஆங்கிலம் நமது மதிப்பிற்குரிய விருந்தாளி, தாய்மொழி நமது அன்னையிலும் இனியது. எப்படிப்பட்ட அன்னிய மொழியானாலும் அது எவ்வளவு வளர்ச்சி, கவர்ச்சி, வனப்பு பொருந்தியதாக இருப்பினும் அது சாதாரண மக்களின் மொழியாக முடியாது. இம்மாகாணத்தில் பேசப்படும் தமிழினுடையவும் மற்றைய திராவிட மொழிகளினுடையவும் ஸ்தானத்தை, ஆங்கிலமும் பெற முடியாது. தாய்மொழி நம் தாய்மார் நம்மைத் தாலாட்டி வளர்த்த மொழி, சிறு குழவிகளாக நாமிருந்தபோது கொஞ்சிய மொழி. நமது மழலைப் பருவமொழி, சிறுவர்களாக இருந்தபோது, கருத்துக்கள் தெளிவடையாதிருந்தபோது, எண்ணங்களை உருவாக்கி வெளியிட ஏதுவாகஇருந்தமொழி அன்னிய பாஷையிலே எவ்வளவுதான் பாண்டிதியம் பெற்றிருந்தபோதிலும், பிற்காலத்திலே காதல், அன்பு, கோபம், சோகம் முதலிய மனோபாவங்களைச் சித்தரித்துக் காட்ட உதவும் மொழி. நமது மரணப்படுக்கையிலே, நம் மரண வேதனையைத் தெரிவிக்க உபயோகிக்கும் மொழி, அப்படிப்பட்ட தாய் மொழிக்கு ஈடானது வேறொன்றுமில்லை." ★

"தென்னாட்டுப் போர்க்களங்கள்"

தமிழரின் பழம் பெருமையை விளக்கிக் காட்டும் வீரச் செயல்கள் பலவற்றை நாம் இலக்கியத்தில் கண்டு மகிழ்கின்றோம். 'என்னே அவர்தம் தீரமும் திறமும்' என்று பாராட்டுகின்றோம். வீரத்தில் சூரர்களாக இருந்தது போலவே எல்லாத் துறையிலும் 'தமிழர் தமக்கிணையிலை பிறர்' என்று கூறிடத்தக்க வகையில் புகழ் பரப்பி வாழ்ந்திருந்தனர். ஆனால் தமிழரின் பீடு நிரம்பிய பெருவாழ்வைப் பற்றி எடுத்துப் பேசினால் 'எங்கே அதற்கு ஆதாரம்?' என்று கேட்பவர்கள் உள்ளனர். இதோ சிலப்பதிகாரத்தில், குறுந்தொகையில் நற்றிணையில், அகத்தில் புறத்தில் பாரீர் எனக் காட்டினால் அவர்கள் கலகலவென நகைத்து" இவை இலக்கியம் அல்லவோ?' வரலாற்றில் காட்டுங்கள்" என்று சொல்லுகின்றனர்.

அப்போதுதான் நாம் 'வரலாற்று நூலா?' என்று அண்ணாந்து பார்க்கின்றோம். நம்மைச் சுற்றியுள்ள எந்த நூலை எடுத்தாலும் அது கற்பனை வளம் மிக்க இலக்கியமாக இருக்கிறதே தவிர இந்த ஆண்டில் இன்ன திங்களில் இன்ன நாளில் இன்னது நடந்தது என்று கூறிடும் நாட்குறிப்பாக இல்லாததைக் காணுகின்றோம்.

வரலாற்றுச் சான்று இல்லை என்று வாய்மூடிக் கிடக்கும் நிலை நமக்கு வருகினறது.

பின்னால் வரும் இனத்திற்கு என்று எல்லாம் சமைத்து வைத்த நம்முடைய முன்னோர்கள் ஏன் வரலாற்றை உருவாக்கவில்லை என்பதனை ஆராய்கின்றபோது நமக்கு ஒரு உண்மை புலனாகின்றது.

இவனுக்குப் பின் இவன்... என்று எழுதிவைக்கும் முறையில் சுவை இருப்பதில்லை. அதில் முயற்சி மிகுதியும் செலவாகின்றது. அதனால் விட்டு விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இந்த முறையில் வரலாறு எழுதுவது தொல்லை தருவது தான், சுவை குறைந்ததுதான் என்றாலும் பயன் மிகுந்திருப்பதை இன்றையதினம் காணுகின்றோம். மேற்கு நாடுகளில் உள்ளவர்களுக்கு வரலாற்று உணர்ச்சியில் உள்ள பற்றின் காரணமாக அங்கு பல்வேறு வகையான வரலாற்று நூல்கள் எழுந்துள்ளன.

இங்கிலாந்து நாட்டை ஆண்ட மன்னர்களில் கோமாளிகள்போல் நடந்துகொண்டவர்களின் விவரங்களை எல்லாம் தொகுத்து 'இங்கிலாந்தின் கோமாளி வரலாறு' என்று ஒரு பெரிய நூலை எழுதியுள்ளனர். இன்று உலகப் பெருநகரமாயுள்ள இலண்டனில் உள்ள ஒவ்வொரு தெரு வளர்ந்த கதையையும், ஒவ்வொரு வீடு பெற்ற மாற்றத்தையும், அங்கு வாழ்ந்த கவிவாணர்கள், இலக்கிய மேதைகள், அரசியல் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள், இவர்கள் எல்லாம் எந்தெந்தச் சிற்றுண்டிக் கடைகளில் சிற்றுண்டி அருந்தினர், எத்தெருக்களின் வழியாக வழக்கமாகச் செல்லுவர் என்பனவற்றையெல்லாம் விவரமாக ஆராய்ந்து வரைந்துள்ள ஏடு ஒன்று இருக்கின்றது.

அமெரிக்காவில் ஆப்ரகாம்லிங்கன் சுடப்பட்ட அன்றைய ஒரு நாளைப் பற்றி ஒருவர் ஒரு நூல் எழுதியுள்ளார்.

ஆனல் தமிழகத்தில் அதைப் போன்ற வரலாற்று நூல் இல்லாமையினுல் நாம் எதைச் சொன்ன போதும் நம்பாத பேர்கள் இருக்கச் செய்கின்றனர்.

ஆனல் பண்டைத் தமிழர் வரலாறே எழுதிவைக்கவில்லையா எனின் எழுதிவைத்துள்ளனர். இலக்கியத்தின் இடை இடையே இங்கும் அங்குமாக வரலாற்றுத் துணுக்குகள் ஏராளமாக நமக்குக் கிடைக்கின்றன. அந்த வரலாற்றுத் துணுக்குகளினுல் தனி மனிதரின் வாழ்க்கை மட்டும் இல்லாமல் தமிழ் இனத்தின் வாழ்க்கையே நமக்குப் புலனுகின்றது. அதுவே போதுமா என்ருல்,

இன்றைய சூழ்நிலையில் போதாதுதான்.

எனவே இப்போதேனும் நாம் 'வரலாறு' என்று தனிவகையிலும் முறையிலும் நமது வரலாற்றைப் படைத்துக் காத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டும். தமிழகம் முன்னேறுவதற்கான பல்வேறு வழிவகைகளில் வரலாற்றுச் செல்வத்தைப் படைத்துக் கொள்வதும் ஒன்ருகும்.

அந்த வகையில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் தமிழகத்திற்குத் தலை சிறந்த தொண்டு ஒன்றினைச் செய்துள்ளார்.

"தென்னுட்டுப் போர்க்களங்கள்"

என்ற தலைப்பில் வெளிவந்திருக்கும் அவரது நூல் தமிழகத்தின் வரலாற்றுக் குறையை நீக்கி நிறை செய்திடும் முயற்சியில் முன்னடி வைத்திருக்கின்றது.

'வீரம் செறிந்த தமிழ் நாட்டில்' தோன்றுதொட்டு ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்ததுவரை நடைபெற்ற போர்கள் அத்தனையைப் பற்றியும் விவரமான செய்திகளைத் திரட்டித் தொகுத்துச் சுவைபட அந்நூல் நமக்குத் தருகின்றது.

சங்க காலத்தில் நடந்த போராயினும், சாளுக்கியர் காலத்தில் நடந்த போராயினும் வேலும் வாளும் மட்டும் இருந்த போராயினும், பீரங்கியை எதிர்த்து நடந்த வேலூர்ப் போராயினும் எதைப் பற்றியும் அந்த நூலில் குறிப்பு இருக்கின்றது.

அந்தக் குறிப்புகளை கோவைப் படுத்தி ஒரு தொடர் காவியம் போல் அமைத்திருப்பது வெறும் போர்ச் செய்திகளை மட்டும் படிக்கின்ருேம் என்ற உணர்ச்சியைத் தராமல் தமிழகத்தின் வரலாற்றையே நம் மனக்கண்முன் கொண்டுவந்து காட்டுகின்றது.

இந்த வீர வரலாற்றின் முன்னுரையில் "தமிழக வரலாறு, தமிழகப் பண்பாடு, தமிழக இலக்கியம் ஆகியவற்றின் ஆராய்ச்சி இன்றும் தமிழகத்திலேயே ஆட்சியாளர், பத்திரிகைகள், கல்வி நிலையங்கள், கல்லூரி, பல்கலைக் கழகங்கள், ஆகியவை அக்கரை கொள்ளாத, கண்ணெடுத்தும் பாராத துறைகளாய் உள்ளன" என்று ஆசிரியர் கூறியுள்ள நிலைமை மாறிடுதல் வேண்டும். அப்போதுதான் முன்னைப் பழமையிலிருந்து பின்னைப் புதுமைகளைப் பெற முடியும்.

வரலாறு ஏதோ கடந்ததைப் பொறித்துவைக்கும் சடங்கு என்று எண்ணிடாமல் வருவதற்கு வழிகாட்டும் நன் முயற்சி என்ற நினைப்பைக்கொள்ளுதல் வேண்டும். இறப்பு, நிகழ்வு, எதிர்—என்றுள்ள மூன்று காலங்களையும் இணைத்துவைப்பது வரலாறுதான். அந்தத் துறையில் நம்முடைய முயற்சி செல்லவேண்டுமாயின் 'தென்னுட்டுப் போர்க்களங்களைப் போன்ற நூல்கள் மிகுந்து வெளிவருதல் வேண்டும்.

தென்னுட்டுப் போர்க்களங்கள் வெறும் போர்ச் செய்திகளை மட்டும் எடுத்துக் கூறிடும் பட்டியல் அன்று. தமிழ் இனத்தைப் பற்றிய நல்லதொரு வரலாறு.

நூலின் தொடக்கத்தில் வீர மரபு, வானவிளிப்பு, அகல் உலகத் தொடர்பு, வடதிசைத் தொடர்புகள் என்ற நான்கு உட்பிரிவுகளில் ஆசிரியர் நம்முடைய நினைப்புக்கு எட்டாத நெடுந்தொலைக்கு அப்பால் வாழ்ந்த தமிழரின் வாழ்க்கை முறையினை வகுத்துக் காட்டி அவர்களின் தனித் தன்மையையும் சிறப்பினையும் நிலைநாட்டியுள்ளார்.

பின்னர் அமைந்துள்ள உட்பிரிவுகளில் சங்ககாலத்தில் தொடங்கி ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்ததுவரை உள்ள கால அளவில் நடைபெற்ற போர்ச் செய்திகள் அத்தனையையும் விவரித்துள்ளார்.

ஆராய்ச்சி என்பது விருப்பு வெறுப்பு இன்றி நடுநிலையில் நின்று செய்யப்பட வேண்டியது என்ற பேருண்மையை நன்கு உணர்ந்த ஆசிரியர் நூல்முழுவதும் அந்த நெறியிலேயே சென்றுள்ளார்.

நூலில் ஆங்காங்கே 'அகழ்வாராய்ச்சி', 'தளர்ச்சிக் கூறு' 'வளர்ச்சிக் கூறு' போன்ற பல சொற்களைப் படைத்திருக்கின்ற முயற்சி புதிய சொல்வளத்தை மொழிக்கு ஊட்டுகின்றது.

இந்த நல்ல நூலைப் பதிப்பித்தவர்களையும் நாம் பாராட்டுதல் வேண்டும்.

நல்ல தாளில், உயர்ந்த முறையில், வெளிநாட்டுப் பதிப்புகளோடு ஒப்பிடும் வகையில் நூலைப் பதிப்பித்துள்ளனர்,

மருதுபாண்டியருக்குப் பின் தமிழகத்தில் இன்றுவரை நடைபெற்றுள்ள அரசியல் வீர வரலாற்று நிகழ்ச்சிக் களங்களாக விளங்கும் அறப் போர்க்களங்களைப் பற்றிய செய்திகளையும் திரட்டித் தமிழகத்திற்கு அளிக்கும் வகையில் ஆசிரியருக்கு ஆர்வம் ஊட்டுதல் தமிழரின் கடமை ஆகும்.

வெளியிடுவோர்:—

ஔவை நூலகம்,
சென்னை.

விலை ரூ. 7

விற்பனையாகின்றன!

சி. என். அண்ணதுரை M.A.
எழுதிய
அறப்போர்
விலை ரூ. 1—00

நாவலர்
நெடுஞ்செழியன் M. A.
தீட்டிய
மொழிப் போராட்டம்
விலை ரூ. 1—00

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் :: திருச்சி-2.

ஒரு குடும்பம்

கன்னங் கரிய கூந்தலுடைய ஒல்லியான அம்மாள் எல்லோரையும் வேலை ஏவிக்கொண்டிருந்தார். தொலேவிலிருந்து பார்ப்பதற்கு மிகவும் இளமையாக இருந்தார்.

"வாஸ்யா! வாஸ்யா! எங்கே போய்விட்டீர்கள்?" என்று உரக்கக் கேட்டார் அவர்.

"இதோ ஒரு நொடியில் கீழேவருகிறேம் அம்மா" சன்னலிலிருந்து பதில் வந்தது.

இரண்டு உயரமான இளைஞர்கள் அறையிலிருந்து வெளியே ஓடிவந்தார்கள். ஒரு சாய்வு மேசையை இரண்டு பேரும் பிடித்துத் தூக்கினர்கள். "இதை எங்கே வைக்கவேண்டும் அம்மா?" என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

"அவர்களது இந்த அம்மாள் தாயாரா?" என்று நான் ஆச்சரியத்தில் மூழ்கினேன். என்னுடைய புதிய பக்கத்து வீட்டு அம்மாள் இந்த இரண்டு உயரமான இளைஞர்களின் தாயார் என்று யாருமே நம்புவது மிகவும் கடினம்.

இந்தப் புதிரைத் தீர்க்க நான் முயற்சித்துக் கொண்டிருந்தேன். அப்போது வீட்டுநிர்வாகி அங்கே வந்து புதுக் குடித்தனக்காரர்களுக்கு உதவி செய்தார்.

"உங்களுக்கு மிகவும் நல்ல அண்டை வீட்டுக்காரர் கிடைத்திருக்கிறார்!" என்று என்னிடம் சொன்னர்.

"பன்னிரண்டு குழந்தைகளைக் கொண்ட அருமையான குடும்பம்!" என்றார்.

*

பன்னிரண்டு! ஒரு டஜன் குழந்தைகள்!! — இத்தனை குழந்தைகளைப் பெற்ற இவர் எப்போதும் இன்முகத்துடனும், பிரியமாகவும் இருந்தார். இவருடைய பெயர் மத்ரியோனு. குடும்பத் தலைவர் மாக்சிம் அடக்கமும், எளிமையும் உருவானவர்; அன்பு உள்ளம் படைத்தவர். குழந்தைகளும் எனக்கு மிகவும் பிடித்தமானவர்களாக இருந்தனர். எப்போதும் சுறுசுறுப்பாக ஓடியாடி மகிழ்ந்து கொண்டிருக்கும் புத்திசாலிக் குழந்தைகளை யாருக்குத்தான் பிடிக்காது.

ஏழை விவசாயியின் மகனை மாக்சிம் பெடோஸ்கின், சிறுவனாக இருந்தபோதே வாழ வழி தேடித் தன்னுடையசொந்தக்கிராமத்தை விட்டுப் புறப்பட்டார். பல ஆண்டுகள் "இதர மக்களுக்காக அவர் வேலை செய்தார்." வீட்டில் தரையை மழு மழுப்பாக்கி மெருகிடும் வேலையைச் செய்யும் ஒரு கம்பெனியில் தன்னுடைய இருபதாவது வயதில் வேலைக்குச் சேர்ந்து அத்தொழிலேக் கற்றுக்கொண்டார். இன்னும் சில ஆண்டுகள் கழிந்தன. திருமணம் செய்துகொண்டு குடும்பத்தை நடத்த வேண்டுமென்று மாக்சிம் எண்ணினர். நகரத்திலுள்ள பெண்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. பெண் தேடுவதற்காகத் தன்னுடையசொந்தக் கிராமத்திற்குச் சென்றார். தான் மணம் செய்துகொள் எப்போகும் பெண்ணை அங்கே அவர் சந்தித்தார். திருமணத்திற்குப் பின் தன் மனைவியுடன் நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அமைதியான ஒரு சந்தில் சிறிய அறையில் தங்களுடைய இல்லற வாழ்க்கையை அவர்கள் தொடங்கினர்.

> 12-குழந்தைகள்! எனினும், அத்தாய், மூப்பு அடையவில்லை!! ஏன்? —என்கிற விபரத்தை விளக்குகிறார், ரஷ்ய ஆசிரியர் பெட்ரோவ். இங்கோ, இரண்டொரு குழந்தைகளிருப்பினும் கூட, அவைகளைப் பராமரிக்க முடியாமல் ஆற்றையும் குளத்தையும் தேடிடும் பரிதாபம் மிகுந்த தாய்மார்களின் செய்திகளே, அடிக்கடி படிக்கிறேம் செய்திகளாக. குழந்தைகள் பிறந்ததுமே, வாழ்வே சுமையாகிவிடுகிறது பலருக்கு! "ஐந்து பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்" என்கிற பழமொழியும் உண்டு!! அங்கோ, அப்படியில்லை. காரணம் என்ன?-விளக்கும், இக் கட்டுரை.

இவர்களுடைய மண வாழ்க்கை இன்பம் நிறைந்ததாயுள்ளது. எப்போதும்போல தன்னுடைய பழைய தொழிலை மாக்சிம் செய்து வருகிறார். மத்ரியோனுவிற்கு வீட்டு வேலைகள் ஏராளமாக உள்ளன.

*

"உங்களுடைய இளமையின் இரகசியம் என்ன?" என்று ஒரு நாள் மத்ரியோனுவிடம் கேட்டேன். "உங்களுக்குப் பனிரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். எனினும் உங்களுக்கு 52 வயது என்றால் யாராலும் நம்பவே முடியாது."

"குழந்தைகள் பிறப்பதினால் யாரும் மூப்பு அடைந்துவிடுவதில்லை" என்று அவர் பதில் கூறினர்.

"அவர்களை யெல்லாம் கருத்துடன் உணவுடையளித்து வளர்க்க வேண்டாமா?"

"கவலை எடுத்துக்கொண்டு குழந்தைகளைக் கண்ணுங் கருத்துமாய் வளர்ப்பதினால் யாரும் மூப்பு அடைந்துவிட மாட்டார்கள். வறுமைதான் ஒருவரைக் கிழமாக்கிவிடுகிறது. குழந்தைகளுக்குப் போதிய உணவு இல்லாவிட்டால், அவர்களுக்கு அவசியமான துணிமணி இல்லாவிட்டால் எதிர்காலம்பயங்கரமானதாய்விளங்கினல், 30-வயதிலேயே தாயாரை இந்தக்கவலைகள்கிழவியாக்கிவிடும் எங்களைப் பொறுத்த மட்டில், நாங்கள் பணக்காரர்களல்ல; ஆனல் நாங்கள் வறுமையை அனுபவித்ததே கிடையாது."

*

மத்ரியோனுவின் வார்த்தைகளில் எனக்கு ஐயமேற்பட எத்தகைய காரணமுமில்லை. அவ

ருடைய குடும்பம் சுபீட்சமாக இருப்பதை என்னால் நன்கு பார்க்க முடிந்தது. குழந்தைகள் ஆனந்தமாயும், ஆரோக்கியமுடனும் இருந்தார்கள். நல்ல உடைகள் உடுத்திக்கொண்டிருந்தார்கள். விடுமுறை நாட்களில் அணிந்துகொள்வதற்கு அனைவருக்கும் நேர்த்தியான ஆடைகள் இருந்தன. அவர்களுடைய பெரிய வீட்டில் ஆடம்பரமான அலங்காரங்கள் இல்லாவிடினும், தேவையான சாமான்கள் அனைத்தும் இருந்தன. டெலிவிஷன் பெட்டி, சாப்பிடும் அறையில் தட்டுமுட்டு சாமான்களை வைத்துக்கொள்வதற்காக சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த அலமாரி, அழகான கண்ணாடிகள் முதலியவற்றை ஒரு குடும்பத்தினால் வாங்கமுடிந்தால், வீட்டில் சொந்தமான நூல் நிலையத்தை வைத்துக்கொண்டிருக்க முடியுமென்றால்,பிறந்தநாள் பரிசாக மகனுக்கு ஒரு 'அக்கார்டியன்' இசை வாத்தியத்தை வாங்கிக்கொடுக்க முடியுமென்றால், அக்குடும்பம் செழிப்பாக இருக்கிறதென்று தானே கூறவேண்டும்? பல ஞாயிற்றுக் கிழமைகளிலும், விடுமுறை தினங்களிலும் அவர்களுடைய வீட்டில் உணவருந்த நான் அழைக்கப்பட்டிருக்கிறேன். எவ்வளவுருசியானஉணவுப்பதார்த்தங்களையும், சுவைமிக்க பணியாரங்கள், ரொட்டிகள் முதலியவற்றையும் மத்ரியோனா தயாரிக்கிறார்! சாமான்கள் வாங்குவதற்காகக் கடைக்கோ அல்லது கூட்டுப்பண்ணைச்சந்தைக்கோநாங்கள் அடிக்கடி சேர்ந்து போயிருக்கிறோம். அநேகமாக நாங்கள் இரண்டுபேரும் ஒரே ரகமான சாமான்களைத்தான் வாங்குவோம். நான் கொஞ்சம் குறைவாக வாங்குவேன்; மத்ரியோனா சற்று அதிகமாக வாங்குவார்.

இவ்வளவு திறமையுடன் வீட்டை அவரால் எப்படி நிர்வகிக்க முடிகிறது என்று நான் அடிக்கடி ஆச்சரியப்பட்டதுண்டு. நன்கு பரிச்சயம் ஏற்பட்ட பின்னர் ஒரு நாள் இக்கேள்வியை அவரிடம் கேட்டேவிட்டேன்.

சற்றும் வித்தியாசம் பாராட்டாமல், அவர் இவ்வாறு பதில் கூறினார்:

“என்னுடைய கணவர் எப்போதுமே நிறையப்பணம்சம்பாதித்து வந்திருக்கிறார். அவருடைய சம்பாத்தியத்தை வைத்துக் கொண்டே நாங்கள் குடும்பத்தை நடத்தியிருக்க முடியும். ஆனால் ஒரு முக்கியமான வருமானம் மட்டும் இல்லாமலிருந்திருந்தால், எவ்வளவு சிக்கனமாக நாங்கள் வாழ்க்கையை நடத்தியிருந்தபோதிலும், பல சாமான்களை எங்களால் வாங்கியிருக்கவே முடியாது.” இவ்வாறு கூறிவிட்டு அவள் நாணமுடன் புன்னகை புரிந்தாள்.

எந்த வருமானத்தைப்பற்றி அவர் குறிப்பிடுகிறார் என்பதை என்னால் சுலபமாக ஊகிக்க முடிந்தது. பெரிய குடும்பங்களைக்கொண்டிருக்கும் தாயார்களுக்கு சோவியத் அரசாங்கம் விசேஷ அலவன்ஸ்களை அளிக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால், இந்த குடும்பத்துடன் நட்பு ஏற்படுவதற்கு முன்பு, இந்த சர்க்கார் உதவியின் பரிமாணத்தைப்பற்றி நான் சரிவர அறிந்திருக்கவில்லையென்றே கூறவேண்டும்.

ஒரு நாள் மத்ரியோனாவும், அவருடைய கணவரும் குடும்ப வரவு செலவு இனங்களைப்பற்றி திட்டமிட்டுக் கொண்டிருந்தபோது, தங்களுடையகுழந்தைகளை வளர்ப்பதற்காக மொத்தம் 70,000 ரூபிள் (ரூபிள்! 100 இந்திய ரூபாய்க்கு 84.30 ரூபிள் மதிப்பாகும்.) அரசாங்க அலவன்சாகக் கிடைத்திருக்கிறது என்று கணக்கிட்டார்கள். இதுமட்டுமல்ல, அநேகமாக இவர்களுடைய குழந்தைகள் அனைவரும் குழந்தை பராமரிப்பு நிலையங்களாலும், குழந்தைப் பள்ளிகளாலும் வளர்க்கப்பட்டார்கள். உண்மையில் கோடை மாதங்களில் மத்ரியோனாவிற்கு குழந்தைகளுடைய பொறுப்பே கொஞ்சம் கூட இல்லையெனக் கூறலாம். ஏனெனில்குழந்தைகளை, குழந்தை பராமரிப்பு நிலையமும், குழந்தைப் பள்ளியும் கிராமப்புறத்திற்கு அழைத்துச் சென்று, அங்கே அவர்களை முற்றிலும் இலவசமாகப் பராமரிக்கிறது.

குழந்தைகள் வளர்ந்து கொஞ்சம் பெரியவர்களாகிப் பள்ளிக்கூடத்திற்குப் போகத் தொடங்கியதும், கவலைகளும், செலவுகளும் அதிகரிக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அப்போதுகூட கோடை முகாம்களில் அவர்கள் இலவசமாக விடுமுறையைக் கழிக்கின்றனர்.

போர்டிங் பள்ளிக்கூடத்தில் எல்லா மாணவர்களும் முழுக்க முழுக்க அரசாங்க செலவிலேயே பராமரிக்கப்படுகின்றனர். இத்தகைய பள்ளியொன்றில் யூரியைச் சேர்த்துவிடலாம் என்று ஜில்லா கல்வி இலாகாவிலிருந்து ஆலோசனை வந்ததும் தான் மிகவும் மகிழ்ச்சியும், ஆனந்தமும் அடைந்ததாக மத்ரியோனா என்னிடம் கூறினாள்.

“இவர்கள் உடல் நலமும் விடா முயற்சியும் உள்ளவர்களாகவும், கெட்டிக்காரர்களாகவும் இருக்கும் வரையில், இவர்களுக்கு மனதுக்குப் பிடித்த வேலை நிச்சயம் கிடைக்கும். நிச்சயம் நல்ல வாழ்க்கையை நடத்த முடியும்” என்று மத்ரியோனா என்னிடம் கூறினார்.

“குழந்தைகள் பிறப்பதினால் யாரும் மூபபு அடைந்துவிடுவதில்லை. வறுமையும், தங்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிய கவலையும்தான் ஒருவரை மூப்பு அடையச் செய்கின்றன” என்று மத்ரியோனா கூறிய வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வந்தன.

இந்தக் குடும்பத்தில் எந்தக் கவலையோ அல்லது வறுமையோ இல்லவே இல்லை. 62 வயதாகியும் மாக்ஸிமின் கண்களில் இளமை ஒளி வீசுவதற்கும், மத்ரியோனாவின் கூந்தலில் ஒரு மயிர்கூட நரைக்காமலிருப்பதற்கும் இதுதான் காரணமாயிருக்க வேண்டும்.

★

வெளிவந்து விட்டது!

தோழர்
டி. கே. சீனிவாசன்
எழுதிய
“குறள் கொடுத்த குரல்”
விலை ரூ. 1—0—0

உங்கள் தேவைக்கு:
சாந்தி நூலகம்
2/122, பிராட்வே, சென்னை—1.

எரியும் நெருப்பில் எண்ணெய்!

விஞ்ஞானம் விந்தைமிகு முடிவுகளை அறிவித்துக்கொண்டிருக்கும் இச்சமயத்தில், நமது நாட்டில் புதியதோர் சாதனையிலீடுபடப் போகின்றனராம்! வறுமையை ஒழிக்கும் சாதனையா, வேதனையை ஒழிக்கும் வகையிலா, கல்வி மணம் பரவச்செய்யவா, ஆலைகள் பல எழுப்பிடும் செயல்களா—என்று திகைக்காதீர்கள்--நாடெங்கும் பக்தியைப் பரப்பப்போகின்றனராம்!!

யார்? சங்கராச்சாரியார் இவ்வண்ணம் தகவல் தந்துள்ளாரா, எந்த ஜீயர் விடுத்த செய்தி இது, தர்மபுரம் தந்ததா அல்லது திருவாடுதுறை திருவாய் மலர்ந்ததா, என்று கேட்கத் தோன்றும். அவர்களுக்குத்தான், விஞ்ஞானம் எந்தப் புதுமையைச் செய்திடினும், அதைக் கவனிக்க வேண்டிய அவசியமே இல்லையே! அக்கார வடிசலும், ஆறுகாலப் பூஜையும், வைரக் கெண்டியும், நவரத்ன மாலையும், வெள்ளிப் பல்லக்கும், வெண்சாமரம் வீச எடுபிடிகளும், கனகாபிஷேகமும், கதிர் தரும் கழனிகளும், விளம்பரம்தர ஏடுகளும், வேண்டியன செய்துதர பக்தகோடிகளும் இருக்கிறார்கள் — இருக்கின்ற சொத்துக்களைப் பராமரித்து, வருகிற பக்தகோடிகளுக்கு மனம் கோணாமல் அருள்காட்டி, நிலையையும் வருவாயையும் காப்பாற்றிக்கொண்டால் போதும் என்ற அளவில் இருந்து வருபவர்களாயிற்றே! ஆனால் அவர்களுக்கு இருக்கவேண்டிய அக்கரை, அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது! ஆமாம், அன்பர்களே, அரசு அறிவிக்கிறது--பக்தியைப் பரப்பப் போகிறதாம்!! இந்திய அரசியலமைப்பில் எம்மதமும் சம்மதம் என்கிற குறிப்பு உண்டு—ஆனால், நமது அரசு, எந்தப் பக்தியை, யாருடைய பக்தியை, இஸ்லாமியருடையதையா, கிறிஸ்துவ மார்க்கத்தையா, புத்தர் கொள்கையினையா, சமணர்தம் கோட்பாட்டினையா, சங்கிலிக் கருப்பனைக் கும்பிடுவோர் சார்பிலா, காட்டேரி காளியாத்தாளின் கருணைப் பிரவாகத்தையா, எதையென்று தெளிவாகத் தெரிவிக்கவில்லை—அறிவித்திருக்கிறது, பக்திக்குப் பாடுபடப் போவதாக!!

கோயில்களில் ஆறுகாலப் பூஜைக்குப்பதில் எட்டுக்கால பூஜைகள் இனிமேல் நடக்கும்போலும், சோம்பேறிகளுக்கும் வாதாடிகளுக்கும் 'சுகம்' தேடுபவர்களுக்கும் உறைவிடமாக விளங்கும் மடங்களில் பஜனைச் சப்தமும் பாராயணக் குரலும் கேட்கச் செய்யும்போலும், நேருபிரான் ஒரு நாளைக்கும்; பண்டித பந்து மற்றோர் நாளும், கிருட்டினமாச்சாரியார் இன்னொரு தினமும் தம்புராவும் தாளக் கட்டையும் ஏந்தி, 'கிருஷ்ணா நீபேகனே' என்று பாடிக்கொண்டு வலம் வருவர்போலும் என்றெண்ணாதீர்கள். அரும்பாடுபட்டு விஞ்ஞானி கண்டுபிடித்து, இன்று நாமெல்லாம் அனுபவிக்கிறோமே வானொலி அதன் மூலம் பக்தி ரசம் தரப்படப்போகின்றதாம்! சென்னையில் சென்ற கிழமை கூடிய 'வானொலி' அமைப்புக் குழுவினர், இந்த முடிவை அறிவித்திருக்கிறார்கள்!!

ரஷ்யா, சந்திரனைப் பறக்கவிடுகிறது! இங்கே வானொலி, பக்தியைப் பரப்பப் போகிறது!!

வானொலி, தம்பிரான் மடமல்ல; மக்கள் செலுத்தும் வரிப்பணத்தைக் கொண்டு வாழும் சர்க்காரின் பொருள். அது இவ்விதம் முடிவு தெரிவிக்கிறதெனின், சர்க்காரின் சம்மதம் இல்லாமலா இருக்கும்! விஞ்ஞானத்தின் விளைவுகளை வைத்து மேல் நாட்டில், படிப்படியாக வளர்ந்துகொண்டு போகிறார்கள். இங்கோ, பெல்ஜியம் செய்துதந்த மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, நார்வே செய்தனுப்பிய வழவழப்பான தாளில், ஜெர்மானியன் அனுப்பிடும் வர்ண இங்கியில், அமெரிக்காக்காரன் தயாரித்த அச்சியந்திரத்தில், அடிக்கப்பட்ட சாமி படங்களையும் வேத நூல்களையும் எடுத்துவைத்துக்கொண்டு பக்தி ரசம் பருகுகிறார்கள்! அதே சமயத்தில், தாங்கள் அனுபவிக்கும் ஒவ்வொரு பொருளும் 'அறிவால்' கிடைத்தது என்பது அறிந்தும், அந்த அறிவையே பரிகாசம் செய்துகொண்டு, அந்த அறிவு வளர்ச்சி பெறுவதே 'பாதகம், பாபம்' என்றும் சொல்லிக்கொண்டு, உலவுகிறார்கள் வைதீகர்கள்!! அவர்களுக்குத் துணை போகிறது, அரசின் நிர்வாகத்திலுள்ள வானொலி.

நவீனயுகம் வழங்கிய தினசரி சாதனங்களில், வானொலி இன்றியமையாததாகும். அதிலும் ஏழை மக்கள் வாழும் இந்த நாட்டில், அறிவு பரவாமலிருக்கும் இந்த மண்ணில், இசையும் கல்வியும் எல்லோருக்கும் கிடைக்கச்செய்யவும், அறிவொளியின் சாதனைகளை அனைவரும் அறியவும் மிக மிகப பயன்படக்கூடிய ஒரு துறை, வானொலி நிலாகா. அதன் மூலம் அற்புதங்களைச் செய்யலாம்! உப்பரிகையிலிருப்போரும், உயர்ந்த அந்தஸ்துப் பெறக்கூடியவரும் மட்டுமே பெறக்கூடிய இன்னிசையினை, எல்லோரும் பெறும்படி செய்யலாம்—கல்லூரிகளுக்குச் சென்று மட்டுமே பெறக்கூடிய அறிவுச் செய்திகளை, ரசமான முறையில் எடுத்துரைக்கலாம் — மொழியும், பழைய வீரமும், மக்களுக்குப் பரப்பிடும் அரும்பணி ஆற்றலாம் — அகநானூறு உண்டு, புறம் இருக்கிறது, சரிதத்தின் அடிபடாத தமிழ் மண் கிடையாது, இவையாவையும் இசையும் சுவையும் கலக்க அளிக்கலாம்-ஆனால், வானொலியினருக்கு அந்த எண்ணம்கூட எழவில்லை! பக்தியைப் பரப்பப் போகிறார்களாம்!!

பக்தியைப் பரப்ப யார் யாரோ இருக்கிறார்கள்—அவர்கள் செய்யட்டுமே அந்த வேலையை என்றில்லாமல், இவர்களுக்கேன் அந்த ஆசை வரவேண்டும்? அந்த இடம்தான் நமக்குப் புரியவில்லை!!

பக்தியை எப்படிப் பரப்பப் போகிறார்கள், இவர்கள்? வயிறு காய்ந்தவனிடம், கோவிலுக்குப் போய் தேங்காயுடைத்து சூடம் சாம்பிராணி கொளுத்து என்று! வாண வேடிக்கைகளையும், வேட்டுச் சப்தங்களையும் அதிகமாக்குங்கள் என்று!! எப்படி, பரப்பப் போகிறார்கள்?

பக்தி, ஒவ்வொருவருடைய தனிப்பட்ட ஆசைகளுக்கு ஆட்பட்டதாக இருப்பதைப் பற்றி நமக்கு அக்கரையில்லை. அறிவு வெளிச்சம் பரவப் பரவ, எது நல்லது, எது தேவையென்பது அவர்கட்கு விளங்கிவிடப் போகிறது. ஆனால், பக்தியை வீதிக்குக் கொண்டு வந்து, வீணடம்பரங்கள் செய்யும் போதுதான் சிக்கல்கள் முளைக்கின்றன.

வெடிமருந்து, விஞ்ஞானம் தந்த ஒன்று! அதைக்கொண்டு கற்பனைத்து

மலை பிளந்து கனிகள் வெட்டலாம்—அங்கே கிடைக்கும் தங்கத்தையும் இரும்பையும் நிலக்கரியையும் கொண்டு, நலம் பெறலாம். ஆனால், அது, இப்போது இந்தப் புராணீகர்கள் கையில் சிக்கிக்கொண்டு என்ன பாடுபடுகிறது. கோயிலில் உற்சவம் என்றால், அதை விளம்பரப்படுத்த வேட்டுக் கிளப்புகிறார்கள்! வேட்டா, கேட்கிறார், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயிருக்கும் மூர்த்தி?

இதோ ஒரு தகவல்: சில கிழமைகளுக்கு முன்பு, குடந்தைக்கு அருகிலுள்ள ஒரு கோயிலில், ஒரு பாம்பு புகுந்துவிட்டது. கோயில் காவலாளிகள் இருவர்—பார்ப்பனீயப் பெரியவர்கள் அல்ல! அடக்கப்பட்ட வகுப்பினர்தான்!! — அந்தப் பாம்பைத் துரத்தினர், அது ஒரு அறைக்குள் நுழைந்து ஒரு பானையின் ஓரம் போய்ப் பதுங்கிக் கொண்டது. துரத்தி வந்தவர், தன் வசமிருந்த நீண்ட கழியால், பாம்பை அடிப்பதற்காக அந்தப் பானையின் மீது ஓங்கிப் போட்டார். அந்தப் பானையில், அதிர்வெடி போடுவதற்காக, வெடி மருந்து இருந்திருக்கிறது! பானையின் மீது அடி விழுந்ததும், வெடி மருந்து வெடித்து, அந்த அறையே நாசமானதோடு மட்டுமின்றி, அந்தத் தோழரும் பிணமானார் — அவருக்குத் துணை சென்ற இன்னொருவருக்குப் படுகாயமாம்!!

இதோ மற்றோர் செய்தி:—

கீவளூர்,
அக். 5

இவ்வூருக்கு அடுத்துள்ள தேவூர், தேவபுரீஸ்வரர் கோவில் அம்புத் திருவிழாவின்போது ஏற்பட்ட கோர வெடி விபத்தில் 14 பேர்கள் காயமடைந்தார்கள். சுவாமி ஊர்வலம் நடைபெற்றபோது இச் சம்பவம் நிகழ்ந்தது. காயமடைந்தவர்கள் நாகை சர்க்கார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது, சந்துரு என்ற 8 வயதுப் பையன் நிலை, கவலைக்கிடமாக இருந்து வருகிறது."

தெரு வீதிக்கு வந்த 'பக்தி'யின் விளைவுகள் இவை! இதையா, இன்னும் அதிகரிக்கச் செய்யப்போகிறார்கள்? ஆண்டவன் நல்லவன்--நம்மைப் படைத்தவன் — அவனுக்கு நன்றி செலுத்தவேண்டுமெனின், வீட்டுக்குள் அமைக்கப்பட்ட பூஜா மடத்துக்கருகே அமர்ந்துகொண்டு செலுத்தட்டுமே பக்தியை! அதை வளர்க்கவும், பரப்பவும், இருப்பவர்கள் தனித்தனியாகப் போய்ச் செய்யட்டுமே அந்த வேலையை!! வானொலிக்கேன் அந்த அக்கரை?

விஞ்ஞானம் தந்த புதுமை வானொலி! அது, இந்தக் காரியத்தில் இறங்கப்போவதாக அறிவித்துள்ளது!

தமிழ் மண்ணில் இந்த அவசர காரியத்தில் ஈடுபட முடிவுசெய்திருக்கும் இதே வானொலி, இன்னொரு துறையிலும் அவசர அவசரமாக ஈடுபட்டு வருகிறது.

அறிவுக்கண் அடைக்கப்படுதலோடு அக் கண்ணுக்கே ஒளிதருவதான தாய்மொழியையும் தகர்த்திடும் திருச்சேவைதான், அது.

இலங்கை வானொலி, இங்குள்ள எண்ணற்ற மக்கள்பால் பெற்றிருக்கும் புகழைக்கண்டு மருண்டு புதிய தோர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்! என்ன தெரியுமா அது? "விவித்பாரதி" யாம்! மக்களுக்கு உற்சாகத்தையும் ஆனந்தத்தையும் ஊட்டுகின்ற நிகழ்ச்சியாம், இது!!

"வணக்கம்," என்கிற சொல்லை வாரி வழங்கியபடி, இலங்கை வானொலியின் நிகழ்ச்சிகள், தினம் துவங்குகின்றன. இங்கோ! அந்தப் புத்தெழுச்சி கூடக் கிடையாது. இந்த இலட்சணத்தில், "வீவித் பாரதியாம்" — அதன் மூலம், இந்திய வானொலியைப் புகழடையச் செய்யப்போகிறார்களாம்!! அதற்குள்ள புதுவழிதான், பக்தியைப் பரப்புவது. இன்னொன்று, இந்தியைப் பரப்புவது.

எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பதாகும் இது—என்று, தி. மு. க. பொதுச் செயலாளர் நெடுஞ்செழியனும் தோழர் வி. பி. ராமனும் வானொலியின் டைரக்டர் ஜெனரலிடம் தெரிவித்து அறிக்கையொன்றும் சமர்ப்பித்திருக்கின்றனர்.

விஞ்ஞானம் வழங்கிய வானொலி, வேதனையினை வளர்த்திடும் வழிகளிலேயே ஈடுபடப்போகிறதா! அறிவும், மொழியும் கலையும் வளரப் பாடுபடப் போகிறதா!!, — என்று, நாம் மட்டுமல்ல, நாடே கேட்கின்ற காலம் இது.

முன்பே, இந்திய வானொலி, ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி வருகின்றது! எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோலமேலும்மேலும் காரியங்களைச் செய்யப் போகின்றதா!! என்று வளரும் அறிவுலகச் சார்பில், வாதைக்கு ஆளாகிவரும் திராவிடச் சமுதாயத்தின்சார்பில்கேட்கிறோம். ★

[பொதுச் செயலாளர் வானொலி இலாகா டைரக்டர் ஜெனரலிடம் சமர்ப்பித்த, அறிக்கையின் பகுதிகள் இவை.]

'விவித் பாரதி' தலைப்பின் கீழ் ஒலிபரப்ப அறிவிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரல், எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்திருக்கிறது; விரும்பாத மக்கள்மீது தேவைப்படாத ஒன்றைத் திணிப்பதற்கு டெல்லி சர்க்கார் எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொள்ளுவர் என்ற தென்னாட்டவரின் சந்தேகங்களை, இந்த அறிவிப்பு உறுதிப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

1957 அக்டோபர் 3-ந் தேதியன்று 'விவித் பாரதி' நிகழ்ச்சி மொத்தம் 7 மணி 15 நிமிடங்களுக்கு இருந்தது; இதில் 9-15 - முதல் 9-30 வரை (பாரத் வாணி) 15 நிமிடங்கள் மட்டுமே—மேலும் 8-15 முதல் 8-35 வரையிருந்த (மஞ்ஜுஷா) 20 நிமிட நேரத்தில் ஒரு பகுதியும் மட்டுமே—பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டது. இதர நாள் நிகழ்ச்சிகளிலும் அதிக மாற்றம் ஒன்றும் இல்லை. மொத்தம் 5 மணி நேர நிகழ்ச்சிகளில் சுமார் 15 நிமிடங்கள் மட்டுமே ஏதோ பிச்சையிடுவதுபோல பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன; எஞ்சியுள்ள நேரம் முழுவதிலும் இந்தி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டு விடுகின்றது. தென்னாட்டு மக்களுக்கு இந்த நிகழ்ச்சிகளின் தலையும் தெரிவதில்லை; காலும் தெரிவதில்லை. இது தங்களுக்குப் புரியாத மொழியில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி, மக்கள் மீது வலுக்கட்டாயமாக அவற்றைத் திணிப்பதற்கு ஒப்பாகும்.

பிரதேச மொழிகளை நிந்திக்கிற வகையில்—புறக்கணிக்கிற வகையில் திட்டமிட்டு இந்தி நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒலி பரபபப்படுவது, சிலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறபடி 'இந்தியைப் பரப்புவதற்கு உதவாது; இந்தி பேசாத மக்களின் நியாயமான உணர்ச்சிகளை, கொஞ்சமும் முன் யோசனையின்றி மிதித்துத் துவைப்பதானது நிலைமையை மேலும் பாதகமாக்கும; அந்த மொழியை (இந்தி) பரப்புவதற்கு உதவாது என்பதுடன், இந்தி பேசுகிற மக்களுக்கும்—பேசாத மக்களுக்கும் இடையில், நீக்கமுடியாத நிரந்தரமான பிளவைத்தான் உண்டுபண்ணும்.

அக்-13: இந்தி எதிர்ப்பு நாள்

எங்கும் நடக்கட்டும்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தார்கள். ஒவ்வொன்ருகப் பரிசீலனை செய்துகொண்டிருந்த அவர், 'எப்போது நிமிருவார்?', என்றுஅவர் முகத்தையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தான்.

கொஞ்சம் நிமிர்ந்ததும், "சார்! நேற்று அந்த நாடகக் கொட்டகையில்... நான் எப்பொழுதும் இப்படி நடந்துகொண்டது கிடையாது சார்... ஏதோ தெரியாத்தனமாக...", என்று குழைந்த குரலில் ஆரம்பித்தான். முதலில் அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை! அவருக்கிருந்த வேலைத் தொல்லையில் இது ஒரு பெரிய சங்கதியா என்ன? சமயா சந்தர்ப்பம் தெரியாமல் யார் இவன்... என்று எண்ணினர்,

"நீ என்னப் பைத்தியக்காரனு?" என்று கேட்டுவிட்டு, அவருடைய வேலையில் அவர் கவனம்செலுத்தலானர். "என்னைப் பார்க்கக்கூட அவர் விரும்பவில்லை—பைத்தியக்காரனு என்று கேட்டபோது அவருடைய குரலில் என்மீதிருந்த கோபம் தெரிந்தது... விஷயத்தை இப்படியே விட்டுவிட்டுப் போகக்கூடாது... என்ன ஆனுலும் சரி. தெரியாமல் தும்மிவிட்டோம் என்பதை அவருக்கு உணர்த்தியே ஆகவேண்டும்...", என்று முடிவு செய்துகொண்டான். எல்லா மனுக்களையும் வாங்கிக்கொண்டு, வந்தவர்களை யெல்லாம் அனுப்பிவிட்டு, களைப்போடு அவர் வீட்டுக்குள் போகக் கிளம்பினர். இது வரையில் வாழ்வாரத்தில் காத்துக் கொண்டிருந்த இவன், குறுக்கேபோய் நின்ருன். சிறிது கூட இடைவெளி தராமல்.

"சார்! என் மனம வருந்துகிறது ...... ஏனென்ருல் நான் தெரிந்து செய்யவில்லை...... கோபித்துக் கொளளக் கூடாது......" என்று ஆரம்பித்தான். அவருக்கு, "இதென்ன தொல்லை!", என்று ஆயிற்று.

"என்னைப்பார்த்தால் உனக்குக் கேலியாயிருக்கா? ஊம்!", என்று மிரட்டும் குரலில், உருட்டும் விழிகளைக் காட்டியபடி உள்ளே போய்விட்டார். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை—நான் கேலி செய்வதாகவல்லவோ, கருதிவிட்டார்! அவர் பெரிய போலீஸ் அதிகாரியாயிற்றே! அவர் மனம் நோக இப்படி நடந்துகொண்டேனே... என்று திகைத்தான். திரும்பினன். என்ன செய்வது—என்று யோசித்துக் கடைசியில் கடித மூலம் அவருக்கு விஷயத்தை விளங்கவைப்பது என்கிற முடிவுக்கு வந்தான். கடிதம் எப்படி எழுதுவது? என்ன எழுதுவது? அப்படி எழுதினல் சாதாரணமாக நினைத்துக்கொள்வாரோ? இப்படி எழுதினல் மரியாதையாகயில்லை போலிருக்கிறதே? — என்ணுதெல்லாம் எண்ணி மனம் புண்ணுனன். எப்படியும் இதற்கு ஒரு முடிவு காணுவிடில், மனதுக்கு நிம்மதி வராது—என்று கருதினன். அதனல் மறு தினமும், அந்த அதிகாரி வீட்டுக்குச் சென்ருன். அவர் முன்பு போய்த் தைரியமாக நின்ருன்.

"சார்! நீங்கள் நேற்று என்னைத் தவறுதலாக நினைத்துவிட்டீர்கள் — உங்களைக் கேலியாக நினைத்து நான் வரவில்லை! யாரையும் நான் கேலியாக எண்ணமாட்டேன்...அதிலும் உங்களைப் போன்ற பெரிய அதிகாரிகளுக்கு மிக்க மதிப்புக் கொடுப்பவன்... தயவுசெய்து இந்த ஏழையை மன்னிக்கவேண்டும் ...... அன்று நாடகக் கொட்டகையில் தும்மியதற்கு மன்னிப்புக் கோரவே நேற்றுவந்தேன்...நான் பெரியவர்களுக்கு எப்போதும் மதிப்புக் கொடுப்பவன்..."

அவன் முடிக்குமுன், அவனல் தன் நேரமும் நினைப்பும் 'கொலை' செய்யப்படுவதாகக் கருதிய அந்த அதிகாரிக்கு தாங்கமுடியாத ஆத்திரம் வந்தது. தும்மலை வைத்துக்கொண்டு, இப்படித் தொந்திரவு கொடுக்கும் அவனது அரிப்பு அவரால் தாங்கமுடியவில்லை. அதனல்,

"போ, வெளியே!", என்று கர்ச்சித்தார். வாயில் பக்கம் கையையும் காட்டினர்.

"சார்! நீங்க கோபித்துக் கொள்ளக்கூடாது..."

அவருக்கு, இயற்கையையும் மீறி எரிச்சல் வந்துவிட்டது. "தர்வான்!", என்று கத்தினர். காவலனைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளலாம் என்று. அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. நடைப் பிணம்போல் வீட்டை நோக்கி நடந்தான். கடைசி முயற்சியும் செய்தாயிற்று. இனி என்ன செய்ய முடியும்? உலகில், தான் செய்யக்கூடாத பெரிய தவறுதலைச் செய்து, பெறவேண்டாத ஒருவருடைய கோபத்தைப் பெற்றுக்கொண்டதாகப் பயந்தான். வீட்டுக்கு வந்ததும், அதே மிரட்சியுடன் படுத்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவனில்லை! அவன் சவம்தான் கிடந்தது படுக்கையில்!!

* * *

கதையை முடித்தான் மாணிக்கம். "என்னப்பா! எனக்குப் புத்தி சொல்வதற்காக நீ கட்டிய கதையா இது?", என்றேன்.

"நான் கட்டவில்லையப்பா! செகாவ் எனும் ரஷ்யச் சிறுகதை ஆசிரியர் தீட்டியது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகம் வந்தது சொன்னேன்," என்ருன்.

"பயமே கூடாதென்கிருயா?"

"பயமே கூடாது என்பதல்ல கதையின் கருத்து. பயப்பட வேண்டியதற்குப் பயப்படவேண்டியதுதான். பாம்பு என்று தாம்புக் கயிற்றையும் கண்டு கலங்குவாருண்டோ?"

"அது கோழையின் செயல்!"

"ஆமாம்! அதனல் தான், கோழை ஆயிரந் தடவைகள் சாகிருன் — வீரன் ஒரே ஒரு தடவை சாகிருன் என்கிற முதுமொழி இருக்கிறது."

"அச்சம் தவிர்! — என்கிருயாக்கும்..."

"ஆமாம்! அச்சத்தையும் தவிர்க்கவேண்டும்— அதேசமயம் அஞ்சுவதுக்கும் அஞ்சவேண்டும். குறள்தெரியுமல்லவா உனக்கு"

"ஆமாம்! அஞ்சுவது அஞ்சாமை பேதமை......"

"ஆமாம்! அஞ்சுவதுக்கு அஞ்சவேண்டும்...அச்சமே கூடாதென்பதற்காக அடங்காப்பிடாரியாகவும் ஆகிவிடக் கூடாது. போர்க்களத்தில், "நான் தளபதிக்குப் பயன்படமாட்டேன். அவர் கட்டளைக்குக் கீழ்ப்படியமாட்டேன்" என்று சொல்லக்கூடாதல்லவா?"

"நிச்சயமாக! அந்தக் கட்டுப்பாடு இல்லாவிடில் எப்படிவெற்றி பெறமுடியும்?"

"அதுதான் மனிதனுக்குத் தேவை—அடக்கம் வேண்டும்; அடாவடித்தனம் கூடாது. அச்சம் தவிர்க்கவேண்டும்; அதற்காக எவரையும் துச்சமென மதிக்கக் கூடாது. அஞ்சுவதுக்கு அஞ்சவேண்டும்; அதனல் எல்லாவற்றிற்கும் அஞ்சும் கோழையாகிவிடக்கூடாது..."

மாணிக்கம் சொன்ன கதையும், விளக்கமும், எனக்குப் பிடித்திருந்தது. மனமும், குழப்பம் நீங்கி தெளிவுபெறறது. ★

காஞ்சி வட்டார பஞ்சாயத்துகள் மாநாடு

9-10-1957 அன்று காஞ்சிக்கு அருகிலுள்ள வில்லிவலத்தில் இந்த வட்டார பஞ்சாயத்து தலைவர்கள் மாநாடு திரு. வி. கே. ராமசாமி (முதலியார்) M.L.A. தலைமையில் அமைச்சர் லூர்தம்மாள் திறந்துவைக்க, அண்ணாதுரை பொருட்காட்சித் திறப்பு விழாவாற்ற, திரு. கோவிந்தராசுலு, M.P. கொடியேற்றுவிக்க சிறப்பாக நடந்தது.

பஞ்சாயத்து தலைவர்கள் அதுபோது தந்த அறிக்கையில் கூறியதாவது :—

பஞ்சாயத்துக்கள் மூலம் கிராம ஆட்சி நடத்திவருவது நமக்கு புதியது அன்று. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, மூவேந்தர் ஆட்சி முறையிலும், பல்லவர் ஆட்சி முறையிலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் சபை, மன்றம், ஊர்வாரியம் என்ற பலதரப்பட்ட பெயர்களின்கீழ் ஊர் ஆட்சி மன்றம் இன்றைய ஆட்சி முறையில் இருக்கும் பஞ்சாயத்துக்கள் போலக் கிராமத்தின் நலன்களை கவனிக்க இருந்துவந்ததை சரித்திர வாயிலாக அறிகிறோம். நம் தாலுக்காவில் முதல் தரப் பஞ்சாயத்தாக இன்று இயங்கி வரும் உத்திரமேரூரில் உள்ள கல்வெட்டுகள் மூலம் சுமார் 1200 ஆண்டுகட்கு முன்னமே அங்குக் கிராமச் சபைகள் இருந்து வந்ததென்பது தெரிகிறது. ஆனால், இடைக்காலத்திலே ஆட்சிமுறை மாற மாறக் கிராமத்தின் நலனைக் கருதுவார் அற்ற வகையில் அப்போதிருந்த கிராமச் சபைகளும், மன்றங்களும் மறைந்து விட்டன. பிறகு ஆங்கிலேயர் வியாபார இயக்கத்தைவிட்டு நம் நாட்டை ஆட்சி செய்ய ஆரம்பித்து, கடந்த நூற்றாண்டில் கிராமங்களில் யூனியன் போர்டு என்றும், பஞ்சாயத்து போர்டு என்றும் பல பெயர்களில் ஊராட்சி மன்றங்கள் அமைத்துத் தற்போது இயங்கிவரும் பஞ்சாயத்து முறை வகையிலும் கிராம ஆட்சி வளர்ந்து வந்துள்ளது. நம் நாடு சுதந்தரம் அடைந்து பிறகு நாட்டுத் தலைவர்கள் பொருளாதாரம் முதலிய திட்டங்களை நிர்ணயிக்கும் நிபுணர்கள் எல்லோரும் ஏகோபித்து அறிவித்தபடி நம் நாடு பொருளாதாரம் கலாசாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் முன்னேற நாட்டிலே நிறைந்துள்ள கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். அதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு, கலாசாரம் மற்றும் அன்றாட வாழ்க்கை வசதிகள் இவைகளைக் கவனிக்கக் கூடிய நல்லதோர் இயக்கம் அமைய வேண்டும். அப்படிப்பட்ட இயக்கம் கிராமப் பஞ்சாயத்துதான் என்பதை நமது அரசாங்கம் நன்கு உணர்ந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் பஞ்சாயத்து ஏற்படுத்த முயற்சி செய்து வருவது, விரும்பத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமாகும். இந்த வகையிலே நம் தாலுக்காவில் உள்ள 336 கிராமங்களில் 111 கிராமங்களுக்குப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டு 79 பஞ்சாயத்துகள் செயலாற்றி வருகின்றன. இந்தப் பஞ்சாயத்துகளின் மொத்த மக்கள் தொகை சுமார் 1,40,000 ஆகும். மூன்று பஞ்சாயத்துகள் புதியனவாக அமைக்கப்பட்டுத் தேர்தல் நடத்த இருக்கிறது. மற்றக் கிராமங்களுக்கும் சீக்கிரமே பஞ்சாயத்துகள் ஏற்படுத்த அரசாங்கம் ஆவன செய்யும் என்று இந்தச் சங்கம் எதிர்பார்க்கிறது. ★

"HOMELAND"

—✱—

HOMELAND சென்னையிலிருந்து இனி வெளிவர இருக்கிறது. அதற்கான அனுமதி கிடைத்துவிட்டது; ஏற்பாடுகள் முடிவடைந்து வருகின்றன.

"நம் நாடு" அச்சகத்தில், Homeland அச்சிடப்பட்டு, 'அறிவகம்' இராயபுரம் என்ற முகவரியிலிருந்து வெளிவரும்.

இனி, Homeland சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகள், மணியார்டர்கள், இன்ஷ்யூர் ஆகியவைகள்

சி. என். அண்ணாதுரை
HOMELAND
'அறிவகம்' — இராயபுரம்
சென்னை-13.

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

'திராவிட நாடு' சம்பந்தமானவைகளை வழக்கம்போல், காஞ்சிபுரம் முகவரிக்கு அனுப்பவும்.

HOMELAND சென்னையிலிருந்து, **அக்டோபர் 27ல்** வெளிவருகிறது.

வாசகர்களும், விற்பனையாளர்களும் இடையிலே ஏற்பட்ட காலத் தாழ்வுக்குப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை.